# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்




உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல் - 29 - 2014

## அரசியல் சாசன சட்டத் திருத்தம் பகுதி IX மற்றும் IX-A (விதி 243G&W) மற்றும் 7வது அட்டவணையில் பட்டியல் IV (4) (உள்ளாட்சி உருவாக்குவதற்கான திருத்தம் அரசாங்கப் பட்டியல்)

# உள்ளாட்சி அரசாங்கத்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் மற்றும் பெண் பிரதிநிதிகளையும் வலுப்படுத்துவதற்கான தேசிய கலந்துரையாடல்

**11 மார்ச் 2014, புதுதில்லி**

வரலாற்றுச் சிறப்பு மிக்க 73வது மற்றும் 74வது அரசியல் சாசன சட்டத் திருத்தங்கள் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெறுவதை கட்டாயமாக்கியது. இந்திய அரசியலில் ஒரு முக்கிய அமைப்பு ரீதியான சீர்திருத்தம் துவங்கியது. தற்போது, பஞ்சாயத்து ராஜ்அமைப்புகள் நாடு முழுவதும் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகளை உருவாக்குவதற்கான நீண்டகால முயற்சிகளுக்குப் பிறகு இவை உருவாகியுள்ளன.

அதிகமான அதிகாரங்கள் அரசிடம் குவிக்கப்பட்டு, அடக்கு முறைகளும் சுரண்டல்களும் பெருகிக்கொண்டிருக்கும் பின்னணியில் அரசமைப்பு சாசனத்துக்கான 73, 74–வது திருத்தங்கள் மக்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் அடிமட்டத்தில் ஜனநாயகத்தைக் கட்டுவதிலும் சட்டவரம்புகளுக்கு உட்பட்ட ஒரு முக்கிய அஸ்திவாரமாக அமைந்துள்ளன. இவை உண்மை நடப்புகளாக மாறவேண்டுமானால், தொடர்ச்சியான மேம்பாடு, பங்கேற்பு ஜனநாயகம் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவையாகும், வேறுபடுத்த முடியாதவையாகும். அடிமட்டத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்துவது, கூட்டாட்சி என்பதை மறுவரையறை செய்வது ஆகியவை அதிகாரங்களைப் பரவலாக்குவதாக மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கத்தையும் ஏழை மக்களின் இதர பிரிவினரையும் அணிதிரட்டி அதிகாரம் வழங்குவதாகவும் இருக்க வேண்டும். இது அரசமைப்பு சாசனத்தின் ஒரு முக்கியமான இலக்காகும்; உயர்ந்த தன்னாளுமை, சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை நோக்கிய பயணத்தோடு இணைந்ததாகும். தற்சார்பு மற்றும் உயர் தன்னாளுமை உரிமை என்ற இலக்கை அடைவதற்காக, மக்கள் தங்கள் சமூக அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும், தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், சுரண்டலுக்கு எதிராகப் போராடவும், சமத்துவமற்ற அடக்குமுறை சார்ந்த அதிகார உறவுகளுக்கு எதிராகப் போராடவும், மனித உரிமைகளை மேம்படுத்தவும், சமூக உடைமைகளைப் பாதுகாக்கவும் பஞ்சாயத்துகள், நகராட்சிகள் ஆகியவை புதிய திட்டத்தின் கீழ் மிக முக்கியமான அமைப்புகளாகியுள்ளன.

அதே நேரத்தில், இந்த அரசமைப்பு சாசனம் அடிப்படையிலான திட்டம் முழுமையானது என்று சொல்வதற்கில்லை. உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக மாநில அரசுகள் கொண்டுவரும் சட்டங்கள் அதிகாரங்களைப் பரவலாக்கும் அரசமைப்பு சாசனத் திட்டத்தை மாநிலங்களில் கறாராக அமலாக்கச் செய்ய வைப்பதில் பற்றாக்குறையாகவே உள்ளது. அதிகாரங்களை மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் என பங்கீடு செய்வது தொடர்பாக அரசமைப்பு சாசனத்தின் 1,2,3 ஆகிய பட்டியல்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கான 4–வது பட்டியலைச் செயல்படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதைத் தெளிவாக வரையறுக்கத் தவறியிருப்பது, பல மாநில அரசு எந்த அளவுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கினால் போதும் என்று கருதுகிறதோ, எந்த அளவுக்கு அது தனக்குப் பாதுகாப்பானது என்று நினைக்கிறதோ அந்த அளவுக்கு மட்டும் நடவடிக்கைகள் எடுத்தால் போதும் என்ற நிலைமையை பல மாநிலங்களில் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில், 73வது சட்டத்திருத்தத்தில் உள்ள 29 அதிகாரங்களும் 74வது சட்டத்திருத்தத்தில் உள்ள 18 அதிகாரங்களும் 1994ம் ஆண்டின் தமிழக பஞ்சாயத்துச் சட்டத்தில் திருத்தம் செய்வதன் வாயிலாகக் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படவில்லை. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடுகள், மாநில நிதி ஆணையம் அமைத்தல், மாநில தேர்தல் ஆணையம் அமைத்தல் போன்ற கட்டாயமாகச் செய்தாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், உள்ளாட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அதிகாரமற்றவர்களாக, பல்வேறு திட்டங்கள் அமலாக்கப்படுவதிலும் பொதுப் பணிகளிலும் அதிகாரிகளுக்கு உதவுகிறவர்கள் என்பதாக மட்டுமே, அவ்வப்போது அரசாணைகள் மட்டும் வெளியிடுவதன் மூலம் அதிகாரப் பரவல் என்பதைச் சுருக்கியுள்ளது தமிழக அரசு. இன்று வரையில் அதிகாரங்களோ, நிதியோ, மாநில அரசுப் பணியாளர் ஏற்பாடுகளோ பரவலாக்கப்படவில்லை.

அவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் ஆய்வுக்கு உட்பட்டவையாக ஆக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஆட்சி நிர்வாகத்துக்கான 4–வது பட்டியலைச் சேர்க்கத்தவறியதன் விளைவாக உள்ளாட்சி அமைப்புகள் தற்சார்பு, தாவாக்களுக்குத் தீர்வு போன்ற முக்கியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரமற்ற அமைப்புகளாகவே உள்ளன.

இந்தப் பின்னணியில் 2014 மார்ச் 11ம் தேதி, உள்ளாட்சி அரசாங்கத்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் மற்றும் பெண் பிரதிநிதிகளையும் வலுப்படுத்துவதற்கான தேசிய கலந்துரையாடல் புதுதில்லியில் நடைபெற்றது. இதில் இந்தியா முழுவதிலிருந்து சுமார் 40க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். கீழ்கண்ட நோக்கங்களுக்களோடு இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

– அரசியல் சாசன சட்டத்தின் 7வது அட்டவணையில் 4வது பட்டியலை இணைப்பது மற்றும் பகுதி IX, IX-Aவில் திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் உள்ளாட்சி அரசாங்கத்தை வலுப்படுத்துவது
– உள்ளாட்சி அரசாங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் மற்றும் பெண் பிரதிநிதிகள் சந்திக்கும் சாதிய ரீதியான பாகுபாடு மற்றும் வன்முறைகளை எதிர்கொள்வது
– தேசிய அளவிலான பிரச்சாரத்தை உருவாக்குவது, அரசியல் சாசன திருத்தங்கள் மூலம் உள்ளாட்சி அரசாங்கத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிவது இந்தப் பிரச்சாரத்தை வெவ்வேறு கட்டங்களில் முன்னெடுத்துச் செல்வதற்கான திறன்களை உருவாக்குவது

துவக்க நிகழ்வில் கலந்துகொண்ட திருமிகு. தேவகி ஜெயின் 12வது ஐந்தாண்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் ஒரு அமைச்சகம் கூட உள்ளாட்சி அரசுகளுக்கு அதிகாரங்களை வழங்கவில்லை என்பது தெளிவாகியது. மத்திய, மாநில அரசுகள் உள்ளாட்சி அரசாங்கத்தை திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள் போலத்தான் நடத்த விரும்புகின்றன, இந்த நிலை மாற இத்தகைய ஒரு தேசிய அளவிலான பிரச்சாரம் அவசியம் என்றார். மேலும், இது தேர்தல் நேரம் என்பதால் ஒவ்வொரு அரசியல் கட்சிகளையும் சந்தித்து அவர்களது தேர்தல் கோரிக்கையில் இந்த கோரிக்கையையும் இணைக்குமாறு கேட்டுக்கொள்வது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

**திரு.ஜார்ஜ்மேய்யூ,** நிர்வாக இயக்குநர், ஐ.எஸ்.எஸ். பேசும் பொழுது அரசியல் உறுதிப்பாடு இல்லை என்றால், இந்தியாவில் எதுவும் நடக்காது. கீழிறிந்து அதிகாரப் பரவலுக்கான கோரிக்கையாக வரத்தினால்தான் 73வது அரசியல் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. மக்களுக்கு அதிகாரம் அளிக்காமல் நாடு முன்னேற்ற முடியாது என்பது உண்மை. மத்திய மாநில அரசுகள் தங்களது ஆட்சி முறையில் ஜனநாயகம் தேவை என்று குரல் கொடுக்கின்றனர். ஆனால், மாவட்டம் மற்றும் அதற்கும் கீழ்மட்ட அளவில், அரசு அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்க வைக்கின்றனர். 73வது திருத்தம் வந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது ஆட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரின் ராஜ்ஜியமாக ஊராட்சி அரசாங்கம் உள்ளது. இந்த நிலை மாற இத்தகைய பிரச்சாரம் தேவை என்று கூறினார்.

காஷ்மீரைச் சேர்ந்த அப்துல் கனி கான் பேசும்போது, ‘‘கடந்த 20 ஆண்டுகளாக காஷ்மீரில் ஊராட்சி அரசாங்க நடைமுறை இல்லை. பாராளுமன்ற அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை. அதனால், உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு இல்லை. தற்போது உள்ளாட்சி அரசாங்கம் நடைமுறைக்கு வந்த பின்னர், பல தலைவர்கள் கொல்லப்படுகின்றனர். பெண் தலைவர்கள் தலைவர் நாற்காலியில் அமர அனுமதிக்கப்படுவதில்லை’’ என்றார்.

துவக்க நிகழ்வை தலைமையேற்று வழிநடத்திய திரு. ஆசி பெர்ணான்டஸ், உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு என ஒரு பட்டியல் (பட்டியல் ஐஏ) உருவாகவில்லை என்றால், உண்மையான அடிதட்டு ஜனநாயகம் என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லாமல் போகும் என்றார். நான்காவது பட்டியலில் இடம் பெறவேண்டிய குறைந்தபட்ச அம்சங்களைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டியது அவசியம் என்றார். இது தவிர, பிஹார், இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், உள்ளிட்ட பல மாநிலங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டு அந்தந்த மாநிலத்தில் உள்ளாட்சி அரசாங்கத்தின் நிலை குறித்தும், பெண் மற்றும் தலித் தலைவர்கள் நிலை குறித்தும் பகிர்ந்து கொண்டனர்.

## இறுதியில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன

– இந்தப் பிரச்சாரம் பற்றிய சிறு குறிப்பு ஒன்றை இறுதி செய்து அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அனுப்புவது
– ஊராட்சித் தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஜனநாயக அமைப்புகள் ஆகிய பல்வேறு அமைப்புகளை இந்தப் பிரச்சாரத்திற்குள் கொண்டு வருவது
– ஜூன் அல்லது ஜூலை மாதத்தில், பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்துவது
– வரைவு திருத்தங்களுடன் ஒரு கொள்கைக் குறிப்பை தயாரித்து அடித்தட்டு ஜனநாயத்தை வலுப்படுத்த பணி செய்யும் பல்வேறு குழுக்களுக்கு அனுப்பி வைத்து இறுதி செய்வது.

**– மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

# தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்துவதற்கான செலவு

**– தீபா சின்ஹா**

*தற்போது சட்டமாகியுள்ள, தேசிய உணவு பாதுகாப்புச் சட்ட முன்வரைவை செயல்படுத்துவதற்கான செலவு குறித்து ஏராளமான தனிப்பட்ட மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும், அந்த மதிப்பீடுகள் அனைத்தும் தவறான கணிப்புகளின் அடிப்படையில் அல்லது பொது வெளிக்கு வராத புள்ளிவிவரங்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன. அந்த மதிப்பீடுகளில் ஒரு விஷயம் பொதுவாக பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது – அதாவது இதற்கான செலவு கட்டுப்படியாகாததாக இருக்கும் என்பதே அந்த விஷயம்.*

தேசிய உணவு பாதுகாப்பு சட்ட முன்வரைவு (என்.எஃப்.எஸ்.பி.) 2013 செப்டம்பர் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து இப்போது அது தேசிய உணவு பாதுகாப்பு சட்டமாக (என்.எஃப்.எஸ்.ஏ.) மாறியுள்ளது. நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் பங்கேற்ற ஒவ்வொருவரும், நாடாளுமன்றத்திற்கு வெளியே அவரது கடந்த கால நிலைபாடு அல்லது அறிக்கைகள் எப்படி இருந்திருந்த போதிலும், உணவு உரிமைக்கு ஆதரவாக வாதாடினர், ஏழைகளுக்கும் பசித்திருப்பவர்களுக்கும் உணவளிக்க வேண்டியது அரசின் கடமை என வலியுறுத்தினர். பல்வேறு கட்சிகள் சார்பில் 300க்கும் மேற்பட்ட திருத்தங்கள் பெரும்பாலான திருத்தங்கள் அனைவருக்குமான பொது விநியோக முறை, பயறுகள்–எண்ணெய்–உப்பு போன்றவற்றையும் உள்ளடக்குதல் ஆகியவற்றின் மூலம் சட்டத்தின் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு ஆதரவாக இருந்தன. சமூக சமையல் கூடங்கள், கைவிடப்பட்டோருக்கான உணவுத் திட்டங்கள் போன்றவற்றையும் இணைக்க வேண்டும் என வாதாடினர். சட்டம் இன்னும் விரிவாகப் பலனளிப்பதாக இருக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகள் உரக்க வாதிட்டுக்கொண்டிருந்தபோது, பிரதான ஊடகங்கள் அந்த சட்டம் நிறைவேற்றப்படுவது குறித்து கவலை தெரிவித்துக்கொண்டிருந்தன. இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தவறுகள் அனைத்திற்கும் – வளர்ச்சி விகிதம் வீழ்ச்சியடைந்தது முதல் ரூபாய் மதிப்பு சரிவடைந்தது வரையில் – இதுதான் காரணம் என்று சொல்லிக்கொண்டிருந்தன. சட்டமுன்வரைவுக்கான இந்த எதிர்வினை, வளமாக இருக்கிற ஒரு சிலருக்கும், உணவு, சுகாதாரம், கல்வி, வேலை ஆகியவை சார்ந்த அடிப்படை வசதிகளுக்கே இப்போதும் போராடிக்கொண்டிருக்கிற பெரும்பகுதி மக்களுக்கும் இடையே தொடர்பற்றுப் போயிருப்பதைக் காட்டுகிறது.

சட்டத்திற்கு எதிரான வாதங்களில், அதற்கு எவ்வளவு செலவு ஆகக்கூடும் என்பது பற்றிய மிகைப்படுத்தப்பட்ட கணக்குகள் காட்டப்படுகின்றன. சட்டத்தை செயல்படுத்தும்போது அதற்கு செலவாகத்தான் செய்யும் என்பது உண்மை. ஆனால், அது நாட்டின் எதிர்காலத்திற்காக செய்யப்படுகிற முதலீடா அல்லது வீணான செலவா என்பதுதான் கேள்வி. இந்தச் சட்டம் அதிக செலவுபிடிக்கக்கூடியது என்பதற்கு ஆதாரமாக முன்வைக்கப்படும் பல்வேறு மதிப்பீடுகள் மிகைப்படுத்தப்பட்டவையாக, எதிர்வாதத்திற்கு உரியவையாக உள்ளன. பல சந்தர்ப்பங்களில் இத்தகைய மதிப்பீடுகள் நம்ப முடியாத ஊடகங்களின் அடிப்படையிலும் தவறான தகவல்களின் அடிப்படையிலுமே உள்ளன. பயன்படுத்தும் புள்ளிவிவரங்களைப் பொறுத்தவரையில் அவை முற்றிலும் வெளிப்படைத் தன்மையோடு இருப்பதில்லை. உண்மையிலேயே எவ்வளவு செலவாகும் என்பதை காலம்தான் காட்ட வேண்டும். ஆனால், இந்தக் கட்டுரையின் நோக்கம் அந்த மதிப்பீடுகளில் உள்ள சில தவறுகளை சுட்டிக்காட்டுவதுதான். சட்டத்தின் முக்கியத்துவத்தை குறைப்பதற்கும், அதன் விதிகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்புவதற்குமே இந்த மதிப்பீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இந்த மதிப்பீடுகள் எப்போதுமே திட்டவட்டமான அடிப்படைகளில் செய்யப்படுவதில்லை என்பதை புரிந்துகொள்வது அவசியம். மாற்று மதிப்பீடுகள் எதையும் முன்வைப்பதற்கு இக்கட்டுரையில் முயற்சி செய்யப்படவில்லை. ஏனென்றால், நிதிச் செலவுகள் குறித்த அதிகாரப்பூர்வ மதிப்பீடுகள் ஏற்கெனவே பொதுத் தளத்தில் கிடைக்கின்றன. எந்த ஒரு முடிவுக்கும் வருவதற்கு முன்பாக பொது விநியோகத் துறை தொடர்பான சில தகவல்கள் இங்கு தரப்பட்டுள்ளன. சில சர்ச்சைக்குரிய பிரச்சனைகள் குறித்து தெளிவுபடுத்துவதே அதன் நோக்கம்.

மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையிலும், பல்வேறு பேட்டிகளிலும், இந்தச் சட்டத்தின் விளைவாக உணவு

மானியத்திற்கான வருடாந்திர செலவு 1.3 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கும் என்று கூறியுள்ளார். இந்த மதிப்பீட்டிற்கான விவரங்கள் கிடைக்கவில்லை என்றாலும், பின்வரும் கணக்குகள் இதற்கான அடிப்படையை விளக்கக்கூடியதாக உள்ளன: சட்டத்தின் 4வது அட்டவணைப்படி இந்தச் சட்டத்தின் கீழ் பொது விநியோக முறைக்கு ஒதுக்கப்பட வேண்டிய மொத்த தானியம் 54.9 மில்லியன் டன் ஆகும். மேலும் 6.5 மில்லியன் டன் தானியம் இப்போது வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. ஒரு கிலோ தானியத்திற்கு ரூ.21.5 மானியமாக வழங்கப்படுவதாக வைத்துக்கொண்டால் 61.4 மில்லியன் டன் தானியத்திற்கு ஓராண்டில் ரூ.1.32 லட்சம் கோடி செலவாகிறது அல்லது தற்போதைய சந்தை விலை நிலவரப்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) சுமார் 1.3. சதவீதம் ஒதுக்கப்படுகிறது.

செலவு குறித்து அரசாங்கம் என்ன சொல்கிறது என்பது ஒருபுறம் இருக்க வேறு 3 மதிப்பீடுகளும் முன்வைக்கப்படுகின்றன. இந்தச் சட்டத்தை ஓராண்டுக்கு 3 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதம் செலவாகும் என்று பல்லா வாதிடுகிறார் (2013).

விவசாய செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் (சி.ஏ.சி.பி.) அறிக்கையில் அசோக் குளாட்டி மற்றும் அவரது சகாக்கள், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதால் அரசாங்கத்திற்கு மூன்று ஆண்டுகளில் சுமார் 6.8 லட்சம் கோடி ரூபாய் (ஓராண்டு சுமார் 2.3 லட்சம் கோடி ரூபாய்) கூடுதல் சுமை ஏற்படும் என்று வாதிட்டுள்ளனர் (2012). மத்திய நிதி அமைச்சகத்தைச் சேர்ந்த பிராச்சி மிஷ்ரா அண்மையில் எழுதிய ஒரு கட்டுரையில் சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படக்கூடிய வருடாந்திர செலவு ரூ.44,411 கோடிக்கும் ரூ.76,486 கோடிக்கும் இடையே இருக்கக்கூடும் என்று கூறியுள்ளார். இந்த மதிப்பீடுகளில் உள்ள சில அடிப்படையான குறைபாடுகள் அடுத்து வரும் பத்திகளில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

### கசிவுகள்:

பல்லாவின் மதிப்பீடுகளில் சில தவறான கணக்குகள் உள்ளன என்று ஏற்கெனவே மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது (கோட்வால் 2013, சின்ஹா 2013), ஒட்டுமொத்த மக்கள் தொகைக்குமான பொது விநியோக முறை தானிய நுகர்வின் சராசரி அளவைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி பொது விநியோகத்துறை மூலம் பலன் பெறுபவர்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது போன்ற பிரச்சனைகளில், பல்லாவின் வாதத்தில் உள்ள முக்கியமான குறைபாடு என்னவென்றால், அவர் தனது மதிப்பீடுகளில் பொது விநியோக முறையில் கீழ் தனி நபர் நுகர்வை கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது அவர் தற்போதைய கசிவு அளவையும் இணைத்துக் கொள்கிறார். இது எப்படி அரசாங்கத்தின் உண்மையான செலவாக மாறும் என்று அவர் விளக்கமளிக்கவில்லை. ஆயினும், 40 சதவீத கசிவிற்குப் பிறகு ஒரு பயனாளி உண்மையிலேயே தனக்கு சட்டப்படி உரிமை உள்ள உணவு அளவை பெறுகிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் கூடுதல் தானியத்தை ஒதுக்கீடு செய்யும் என்று மட்டுமே அவர் ஒரு ஊகத்திற்கு வருகிறார். ஆகவே, ஒரு நபருக்கு ஒரு மாதத்தில் 5 கிலோ வழங்குவதற்காக அரசாங்கம் உண்மையில் ஒரு நபருக்கு ஒரு மாதத்தில் 8.3 கிலோ அளவிற்கு வழங்கும் என்கிறார். இந்த கூடுதல் செலவுக்காக என அரசாங்கம் வழங்குகிற மானியம்தான் உண்மையான செலவாக இருக்கும் என்றும் அவர் கூறுகிறார். இது ஒரு அபத்தமான ஊகம் என்று விளக்க வேண்டிய அவசியமில்லை. அரசுக் கொள்கைகளில் அனுபவமுள்ள எவருக்கும், இந்த அடிப்படையில் பட்ஜெட்டுகள் தயாரிக்கப்படுவதில்லை என்பது தெரியும். பொது விநியோக முறையில் ஏற்படுகிற கசிவு என்பது ஒரு கடுமையான பிரச்சனை, ஆழமான தலையீடுகள் தேவைப்படுகிற பிரச்சனை.

கசிவுகள் பிரச்சனையை சீர்திருத்தங்கள் மூலமாகவே சரிபடுத்த வேண்டுமேயன்றி கூடுதல் செலவுகள் மூலமாக அல்ல. அவ்வாறு கூடுதல் செலவுகள் செய்கிறபோது, அதிலும் ஒரு பகுதி கசியக்கூடும். நிர்வாகம், கண்காணிப்பு, மதிப்பீடு போன்றவற்றில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால், பட்ஜெட் மதிப்பீடுகளை தயாரிக்கும்போது இந்த விவரங்களை, ஊழல் சம்பந்தப்பட்ட கசிவுகளோடு சேர்த்து குழப்பிக்கொள்ளக்கூடாது.

### விவசாய உற்பத்திச் செலவுகள்:

பல்லாவின் மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை மற்றவர்கள் வலுவான முறையில் சுட்டிக்காட்டி மறுப்புத் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் குலாட்டியும் அவரது சகாக்களும் செய்துள்ள ஆய்வு தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக அந்த ஆய்வு, நாட்டின் உணவு நிர்வாக அமைப்பின் ஒரு அங்கமாக உள்ள நிறுவனத்திடமிருந்து வந்துள்ளது என்பதால் கூடுதல் கவனத்திற்கு உரியதாகிறது. சி.ஏ.சி.பி. மதிப்பீட்டின்படி மூன்று ஆண்டுகளில் 6.8 லட்சம் கோடி ரூபாய் செலவாகிறது. இது உணவுக்கான நேரடி மானியத்திற்கு அப்பாற்பட்டது. இதில் ‘‘விவசாய உற்பத்தி மேம்பாட்டு செலவுகள்’’ என்ற ஒரு உட்கூறு சேர்க்கப்படுகிறது. சட்டத்தை நிறைவேற்றுவதற்கு விவசாய உற்பத்தி 25 மில்லியன் டன் வரையில் அதிகரிக்க வேண்டியுள்ளது என்று சி.ஏ.சி.பி. அறிக்கை கூறுகிறது. கோதுமை, அரிசி உற்பத்தியில் 30 சதவீத அளவிற்கு கொள்முதல் அளவு

பராமரிக்கப்பட வேண்டும் என்ற ஊகத்தின் அடிப்படையில் இந்தப் புள்ளி விவரம் தரப்பட்டுள்ளது. முதலாவதாக, ஏற்கெனவே நமது கொள்முதல் அளவு 30 சதவீதத்திற்கு மேல் இருக்கிறது என்கிறபோது, கூடுதல் கொள்முதலை குறைந்த சதவீதம் அளவிற்கு உயர்த்தினால் போதாதா என்பது குறித்து தெளிவுபடுத்தப்படவில்லை. இரண்டாவதாக இந்தக் கணக்கில் சட்டத்தை நிறைவேற்ற 75 மில்லியன் டன் தானியம் தேவைப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் தேவைப்படுவது 62 மில்லியன் டன் மட்டுமே. மூன்றாவதாக விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு குறித்த விவரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. உணவு உற்பத்தி அளவு அப்படியே (190 மில்லியன் டன்) நீடிக்கும் என்று எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நான்காவதாக, கோதுமை, அரிசி ஆகியவற்றின் உற்பத்தி மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதர தானியங்கள் உற்பத்தி கணக்கில் சி.ஏ.சி.பி. மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை.

எவ்வாறானாலும், விவசாயத்தில் அரசு முதலீடுகளை காரணம் காட்டுவது நியாயமல்ல. இந்த சட்டத்திற்கு அரசு முதலீடு தேவை அல்லது முற்றிலுமாக அரசு முதலீடுகளே தேவைப்படும். 1990களிலிருந்தே விவசாயத்தில் அரசு முதலீடு தேக்கமடைந்துவிட்டது. இதனால், விவசாயப் பொருளாதாரமும் தேக்கமடைந்துவிட்டது. கிராமப் பகுதிகள் வாழும் பெரும்பான்மையான மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க இந்த நிலைமை சரி செய்யப்பட்டாக வேண்டும். உணவைப் பொறுத்தவரையில் தன்னிறைவோடு நாம் பிறந்தாக வேண்டும். 1960களில் நடந்தது போல இதற்கு நான் இறக்குமதிகளை சார்ந்திருக்கக்கூடாது. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் என்பது இருந்தாலும் இல்லாவிட்டாலும் விவசாய உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் மேம்படுத்துவது என்பதே தனிப்பட்ட லட்சியங்கள்தான். சொல்லப் போனால் பயறுகள், எண்ணெய், நாடு முழுவதும் அதிகாரப் பரவலுடன் கூடிய கொள்முதல் (அது போக்குவரத்துச் செலவுகளை குறைக்கவும் உதவும்) ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான, சீர்திருத்தம் செய்யப்பட்ட பொது விநியோக முறை விவசாயத்திற்கு மறு ஊக்கமளிப்பதற்கு இட்டுச் செல்வதாக இருக்கும்.

திட்டச் செலவுகள் பற்றிய எதார்த்தமற்ற மதிப்பீடுகளை செய்துகொண்டிருப்பதற்கு பதிலாக ஆய்வாளர்கள் தங்கள் ஆற்றல்களை, பாரம்பரியமாக தானிய கொள்முதல் நடைபெறாத மாநிலங்களிலிருந்து செய்யப்படும் கொள்முதல்களை அதிகரிப்பதற்கான வழிகள் பற்றி ஆராயலாம். அதன் மூலம் முடிந்த வரையில் ஒவ்வொரு மாநிலத்திலும் விநியோகிக்கப்படும் தானியங்கள் அதே மாநிலத்திலிருந்து அல்லது அண்டை மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டதாக இருக்கும். இதனை சி.ஏ.சி.பி. அறிக்கை கூட குறிப்பிட்டுள்ளது. இதனால் செலவுகள் குறையும் என்று சிஏசிபி கூறியுள்ளது. புதிய மாநிலங்கள் தங்களுடைய கொள்முதலை அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில் (உதாரணமாக மத்திய பிரதேசம், மேற்கு வங்கம்) இது நிச்சயமாக சாத்தியமானதேயாகும்.

சிறப்புப் பிரிவினருக்கான புதிய திட்டங்கள் போன்ற வேறு சில திட்டங்களுக்கான செலவுகள் இனியும் பொருத்தமற்றவையாகும். ஏனெனில், இறுதியான சட்ட முன்வரைவில் இந்த அம்சங்கள் எடுக்கப்பட்டுவிட்டன.

## அதிகரிக்கும் செலவுகள்

பிராச்சி மிஸ்ரா செய்துள்ள மதிப்பீடுகளும் கூட தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்துவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை வேறொரு வடிவில் சொல்வதாகவே இருக்கிறது. அவரது கட்டுரையிலும் கணிப்புகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. பயன்படுத்தப்பட்டுள்ள புள்ளி விவரங்களுக்கான ஆதாரங்களும் தெரிவிக்கப்படவில்லை. அளவு, விலை அல்லது பயனாளிகள் ஆகிய அம்சங்களில் மாநில அளவிலான பொது விநியோக முறையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாறுபாடுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மத்திய உணவு அமைச்சகம் கூடுதல் செலவுகளாக ரூ.24,000 கோடி ஏற்படும் என்று கூறியுள்ளது. அதில் வேறு பல செலவுகளை சேர்க்கிற வேலையைத்தான் பிராச்சி மிஸ்ரா செய்துள்ளார். முதலாவதாக வருவது விதிவிலக்குகளுக்கான செலவுகளாகும். அதாவது, எவரொருவருக்கும் தற்போது கிடைத்துக்கொண்டிருக்கும் உணவு அளவு குறைந்துவிடக்கூடாது என்று கருதக்கூடிய மாநில அரசுகள் விரும்புமானால், அவை கூடுதலாக ரூ.20,474 கோடி செலவிட வேண்டியிருக்கும் என்று பிராச்சி மிஸ்ராவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இரண்டு ஊகங்களின் அடிப்படையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: (1) தற்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 35 கிலோ தானியம் (அல்லது ஒவ்வொரு தனிநபருக்கும் சுமார் மாதம் 7 கிலோ) கிடைத்து வருகிறது. இந்த சட்டத்தின் மூலம் இனி, வறுமைக் கோட்டிற்கு கீழே (பீபிஎல்) வாழும் குடும்பங்களைச் சேர்ந்தோர் ஒவ்வொருவரும் தங்களது மாதாந்திர ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு கிலோ அளவிற்கு இழக்க நேரிடும். ஆனால், இவ்வாறு கணக்கிடுவதில், பல மாநிலங்கள் இப்போதே வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்களுக்கு 35 கிலோ தானியம் வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றன என்பது கருத்தில் கொள்ளப்படவில்லை. ஆந்திரா, பீகார், கர்நாடகம், ஒடிசா, மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் ஆகிய பெரிய மாநிலங்கள்தான் இந்தப் பிரிவினருக்கு மாதம் 35 கிலோவிற்குக் குறைவாக தானியம் வழங்கிக்

கொண்டிருக்கின்றன. (2) வறுமைக் கோட்டிற்கு மேலே (ஏபிஎல்) உள்ள சுமார் 18 கோடி மக்களுக்கு இழப்பீடு செய்ய வேண்டியிருக்கும் என்ற ஒரு வாதத்தை மிஸ்ரா முன்வைக்கிறார். இந்த வாதத்திற்காக அவர் இந்தப் பிரிவினருக்கு ஏபிஎல் விலைகளில் ஒவ்வொருவருக்கும் 3 கிலோ தானியம் வழங்குவதற்கான செலவை சேர்த்துக்கொள்கிறார். இந்த மதிப்பீட்டிற்கு அவர் எவ்வாறு வருகிறார் என்பது தெளிவாக இல்லை. ஏபிஎல் பிரிவைச் சேர்ந்தோருக்கு ஒரு சில மாநிலங்களில் மட்டுமே தானியம் வழங்கப்படுகிறது என்பது தெரிந்த விஷயமே. வழங்கப்படும் அளவும் இந்த சில மாநிலங்களில் மாறுபடுகிறது. உத்தரபிரதேசம், ஹரியானா, ஒடிசா ஆகிய மாநிலங்களில் மாதம் 10 கிலோவும், அசாம் மாநிலத்தில் 25 கிலோவும் வழங்கப்படுகின்றன. இத்துடன் தவறான வகைப்பாடுகளுக்கான செலவாக ரூ.11,000 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. பீபிஎல் வகைப்பாட்டில் சுமார் 25 சதவீத தனிநபர்கள் தவறான முறையில் சேர்க்கப்பட்டுள்ளனர், உண்மையில் அவர்கள் மேம்பட்ட நிலையில் இருப்பவர்களே என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஊகத்திற்கும் அடிப்படை எதுவும் இல்லை. மிஸ்ரா தனது மதிப்பீட்டில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் உள்ள குறை தீர்ப்பு ஏற்பாடுகள், பேறுகால உரிமைகள், மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஆகியவை சார்ந்த செலவீனங்களையும் சேர்த்துள்ளார். இவை ஒவ்வொன்றிலும் மத்திய மாநில அரசுகளுக்கிடையே செலவு பங்கீட்டு ஏற்பாடுகள் என்ன என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இந்த செலவுகள் சேர்க்கப்படவேண்டியவைதான் என்றாலும், மத்திய அரசின் செலவுச் சுமை என்ன என்பதை துல்லியமாக கணித்துவிட முடியாது.

அதிகரிக்கும் செலவுகளை சரியான முறையில் ஒப்பிட வேண்டும் என்றால், குறிப்பாக நேரடி உணவு மானியம் அல்லாத இதர அம்சங்கள் தொடர்பான செலவுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் நிலையில், பொது விநியோக முறை மற்றும் அது தொடர்பான இதர நடவடிக்கைகளுக்கு மாநில அரசுகள் தற்போது செய்து வரும் செலவுகளும், இந்த சட்டத்திற்குப் பிந்தைய சூழலில் மாநில அரசுகளின் சேமிப்புகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். 2012 – 2013ல் "உணவு தானிய சேகரிப்பு மற்றும் பராமரிப்பு" தேவைகளுக்காக அனைத்து மாநில அரசுகளாலும் ரூ.5,648 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக இந்திய ரிசர்வ் வங்கி மாநில நிதி நிலைமைகள் குறித்து தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேற்கொண்டு ரூ.8,305 கோடி வரையில் குடிமைப் பொருள்கள் வழங்கல் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் ரிசர்வ் வங்கி கூறுகிறது. இது எப்படி இந்த சட்டத்திற்கு பிந்தைய நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. "ஊட்டச்சத்து" நோக்கத்திற்காக மாநில அரசுகளால் 19,000 கோடி ரூபாய்க்கு மேலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய பீபிஎல் ஒதுக்கீடுகளுக்கு அப்பால், மாநில அரசுகளின் இந்த ஒதுக்கீடுகளிலிருந்து ஓரளவுக்கு கூடுதல் நபர்களுக்கு பலன் கிடைக்கும் என்கிற அளவில், மாநில அரசுகள் ஓரளவுக்கு பணத்தை சேமித்துக்கொள்ள முடியும். ஏனெனில், மாநிலங்களுக்கு இப்போது மத்திய அரசிடமிருந்து குறைந்த விலையில் கூடுதலாக தானியங்கள் கிடைக்கும். மாநிலங்கள் சேமிக்கக்கூடிய தொகை எவ்வளவு, கூடுதலாக செலவிடக்கூடிய தொகை எவ்வளவு என்பது பற்றிய சரியான மதிப்பீடுகளுக்கு வருவதற்கு மாநில வாரியான ஆய்வுகள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய முயற்சி எதுவுமில்லாமல், மாநில அரசுகளின் சேமிப்புகளை கணக்கில் கொள்ளாமல் அதிகரிக்கும் செலவுகள் குறித்து மட்டும் மதிப்பிடுவது என்பது தவறானதாகிவிடும்.

## பொது விநியோகம், கொள்முதல் தொடர்பான சமீபத்திய விவரங்கள்

சட்டத்தின் செலவு கணக்குகள் மட்டுமின்றி இந்த சட்டத்தால் நாட்டின் பொருளாதாரத்திற்கு தீங்கு ஏற்படும் என்ற அச்சங்களும் கிளப்பிவிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தேவைப்படும் உணவு தானியங்களின் அளவு மற்றும் விவசாயிகளிடமும் உற்பத்தியிலும் கொள்முதலிலும் அதனால் ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கெனவே கூறியபடி, இந்த சட்டத்திற்காக கொள்முதலை உறுதிப்படுத்துவது பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும் என்று சிஏசிபி மதிப்பீட்டில் கூட கூறப்பட்டுள்ளது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில், 2000 – 01 முதல் தானியங்கள் உற்பத்தி மற்றும் கொள்முதல் ஒட்டுமொத்தத்தில் அதிகரித்து வந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இந்த சட்டத்தின் கீழ் இதர வகை தானியங்களும் வழங்கப்படும் என்று வழங்கப்பட வேண்டும்.

தற்போது அந்த தானியங்கள் மிகக் குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆயினும் அவையும் இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன). சட்டத்தை செயல்படுத்துவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள, மொத்த உற்பத்தியில் 30 சதவீத கொள்முதல் என்பதே போதுமானதாகும். இதர தானியங்களை சேர்க்காமலே கூட, தேவைப்படக்கூடிய கொள்முதல் உற்பத்தியில் 32 சதவீதத்திற்கு மேல் போய்விடாது.

**அட்டவணை: தானியங்கள் உற்பத்தியும் கொள்முதலும் (2000–13, மில்லியன் டன் அளவுகளில்)**

| ஆண்டு | உற்பத்தி (அரிசி, கோதுமை) | உற்பத்தி (அரிசி, கோதுமை, இதர தானியங்கள் | தானியங்கள் கொள்முதல் (இதர தானியங்கள் உள்பட) | மொத்த தானிய உற்பத்தியில் (இதர தானியங்கள் உள்பட) |
|---|---|---|---|---|
| 2000–01 | 154.7 | 185.7 | 35.9 | 19.3 |
| 2001–02 | 166.1 | 199.5 | 43.0 | 21.6 |
| 2002–03 | 137.6 | 163.7 | 35.5 | 21.7 |
| 2003–04 | 160.7 | 198.3 | 39.3 | 19.8 |
| 2004–05 | 151.8 | 185.2 | 42.3 | 22.8 |
| 2005–06 | 161.1 | 195.2 | 43.5 | 22.3 |
| 2006–07 | 169.2 | 203.1 | 34.3 | 16.9 |
| 2007–08 | 175.3 | 216.0 | 40.1 | 18.5 |
| 2008–09 | 179.9 | 219.9 | 58.2 | 26.5 |
| 2009–10 | 169.9 | 203.4 | 57.8 | 28.4 |
| 2010–11 | 182.9 | 226.3 | 56.9 | 25.1 |
| 2011–12 | 200.2 | 242.2 | 63.4 | 26.2 |
| 2012–13 | 197.8 | 237.4 | 70.6 | 29.8 |

*ஆதாரம்: விவசாய புள்ளி விவரங்கள், மத்திய வேளாண் அமைச்சகம்*

இரண்டாவது அச்சமாக, மிக அதிக அளவில் கசிவுகளும், தானியங்கள் வேறு நோக்கங்களுக்கு மாற்றப்படுவதும் இருக்கும் என்பதால், பொது விநியோக முறையில் நிறைய வீணாகக்கூடும் என்பதால் இது “விழலுக்கு இறைத்த நீராகிவிடும்” என்று கூறப்படுகிறது. பொது விநியோக முறையில் ஏற்படக்கூடிய கசிவுகளின் அளவு கவலைக்குரியதுதான். ஆனால், அதைத் தடுக்க எதுவுமே செய்ய முடியாது என்ற முடிவுக்கு வருவது சரியல்ல. பொது விநியோக முறையில் 2004–05ஆம் ஆண்டில் 54 சதவீதமாக இருந்த கசிவு, 2007–08ம் ஆண்டில் 44 சதவீதமாகவும், 2011–12ம் ஆண்டில் 35 சதவீதமாகவும் குறைந்துவிட்டதை தேசிய மாதிரி ஆய்வு நிறுவன விவரங்கள் தெரிவிக்கின்றன. 35 சதவீதம் கசிவு ஏற்படுகிறது என்பது கவலைக்குரியதுதான் என்றாலும் கூட, அது குறைந்து வருகிறது என்பது ஊக்கமளிப்பதாகவே இருக்கிறது. மேலும், மாநில வாரியாக ஒருங்கிணைக்கப்படாத புள்ளிவிவரமாகவே இது இருக்கிறது. தானியங்கள் வேறு நோக்கங்களுக்கு திருப்பிவிடப்படுவது என்பது சில மாநிலங்களில் வெகுவாகக் குறைந்திருக்கிறது. வேறு சில மாநிலங்களில் இந்தப் பிரச்சனை தொடர்கிறது. பொது விநியோக முறை சென்றடைகிற மக்களின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ள, விலைகள் குறைக்கப்பட்டுள்ள மற்றும் / அல்லது தனியார் மயமாக்கல் கைவிடப்பட்டுள்ள, மக்களுக்கே சென்று விநியோகிப்பது என்பது ஏற்படுத்தப்பட்டுள்ள கணினி பதிவு முறை கொண்டுவரப்பட்டுள்ள பயனுள்ள முறையில் குறைதீர்ப்பு ஏற்பாடுகள் செயல்படுத்தப்படுகிற மாநிலங்கள்தான் பெருமளவுக்கு சிறப்பாக செயல்படுகின்றன என்பதை ஒரு ஆய்வு காட்டுகிறது (ஹிமான்ஷு 2013; கேரா 2011). ஆகவே, இந்த சட்டம் செயல்படுத்தப்படுவதன் விளைவாக கசிவு அளவு மேலும் குறையும் என எதிர்பார்ப்பது நியாயமே.

தானியங்கள் சேதமடைதல், வீணாகுதல் ஆகிய பிரச்சனைகளிலும் கடந்த சில ஆண்டுகளில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 2002 – 03ம் ஆண்டில் இந்திய உணவு கழகத்தில் தானியங்கள் வீணாகிப் போன அளவு 1.35 லட்சம் டன் ஆகும். 2012–13ம் ஆண்டில் (பிப்ரவரி வரையில்) இது 1,454 டன் என்கிற அளவிற்கு குறைந்துவிட்டது. சதவீதக் கணக்கில் பார்த்தால் 2007–08ல் இதே 0.1 சதவீதமாக இருந்தது, 2012 – 13ல் 0.004 சதவீதமாக குறைந்துவிட்டது (ஆதாரம்: உணவு மற்றும் பொது விநியோகத் துறை, வருடாந்திர அறிக்கை 2012–13).

## முன்னால் உள்ள வழி

தற்போது சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், சட்டமும் அதன் திட்டங்களும் சுமூகமாக செயல்படுவதற்கு, சில பலவீனமான அம்சங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். செலவுபற்றிய விவாதங்களுக்கு பதிலாக செயலாக்கம் குறித்த விவாதங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். 67 சதவீத மக்களுக்கு பலன் கிடைக்கும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவை என்றாலும் கூட பயனாளிகள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதற்கான வரையறைகள் எதுவும் இல்லை. இதை எவ்வாறு செய்வது என்பதற்கு சமூகப் பொருளாதார மற்றும் சாதிவாரி கணக்கெடுப்பு (எஸ்.இ.சி.சி.) உதவிகரமாக இருக்கக்கூடும். ஆனால், அந்தக் கணக்கெடுப்பு இன்னும் சரிபார்க்கப்பட்டு வெளியிடப்படவில்லை. ஏழைகள் யாரென்று அடையாளம் காண்பதற்கு பதிலாக பணக்காரர்களை விலக்கி வைத்து மற்றவர்களுக்கு பயனை அளிப்பது என்பது சிறப்பாக செயல்பட முடியும் என்பதை அனுபவங்களும் ஆய்வுகளும் காட்டுகின்றன. பயனாளிகளை விரிவுபடுத்துவதன் மூலம், குறிப்பாக கிராமப் பகுதிகளில் விரிவுபடுத்துவதன் மூலம் இதனை எளிதாகச் செய்ய முடியும். சத்தீஸ்கர் உணவு பாதுகாப்பு சட்டம் இதற்கான 4 வகைப்பாடுகளை கொண்டிருக்கிறது. வருமான வரி செலுத்துகிறவர்கள், நகரப் பகுதிகளில் 1000 சதுர அடிக்கு மேற்பட்ட தரைப் பகுதி கொண்ட சொந்த வீடு உள்ளவர்கள், பட்டியல் பகுதி அல்லாத இடங்களில் 4 ஹெக்டேருக்கு மேற்பட்ட பாசன நிலம் அல்லது 8 ஹெக்டேருக்கு மேற்பட்ட பாசன வசதி பெறாத நிலம் ஆகியவற்றை உடைமையாகக் கொண்டுள்ளவர்கள் என சதீஸ்கர் சட்டம் வகைப்படுகிறது. இத்தகைய எளிமையான, நேரடியான விலக்கல் நடைமுறைகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஏற்ற வகையில் உருவாக்கப்பட முடியும்.

சில வறிய மாநிலங்களில் இந்த சட்டத்தால் பொது விநியோக முறை பெருமளவுக்கு விரிவடையக்கூடும். அசாம், பீகார், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களில் சுமார் 85 சதவீதம் பேர் இந்த சட்டத்தால் பயன் பெறுவார்கள். உத்தரப் பிரதேசம், ஒடிசா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 80–82 சதவீத மக்கள் பயன் பெறுவார்கள். இவற்றில் பல மாநிலங்களில் பொது விநியோக முறை சீர்திருத்தம் என்பது இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. கசிவு அளவைக் குறைப்பதற்கும், மக்கள் தங்களது உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் ஏற்ற வகையில் தானிய சேகரிப்பு, விநியோகம், கடமைப் பொறுப்பு, கண்காணிப்பு ஆகிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் பொது விநியோக முறையை விரிவுபடுத்துவது, குறிப்பாக மேற்கூறிய மாநிலங்களில் விரிவுபடுத்துவது, பொது விநியோக முறையை சீர்திருத்தவும் பட்டினியை ஒழிக்கவும் வழிவகுக்கும். பல மாநில அரசுகள் பொது விநியோகத்திற்கான நிதியை விரிவுபடுத்துவதற்காக ஏற்கெனவே ஏராளமான கூடுதல் நிதியை செலவிட்டுக்கொண்டிருக்கின்றன. மத்திய அரசிடமிருந்து அந்த மாநிலங்களுக்கு கூடுதல் ஆதரவு கிடைக்காது என்பதால், மிகவும் பின்தங்கியுள்ள மாவட்டங்களிலாவது சீரான பொது விநியோக முறையை கொண்டு வருதல், பயறுகள், எண்ணெய் முதலிய மற்ற பொருள்களையும் வழங்குதல், தானியங்களை அதிக அளவில் வழங்குதல், குறைந்த செலவில் ஊட்டச்சத்துள்ள உணவை தயாரித்து வழங்கக்கூடிய சமூக உணவுக்கூடங்களை அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை மாநில அரசுகள் பரிசிலீக்கலாம்.

பரவலான கொள்முதலுக்கான குறிப்பான விதிகள் எதுவும் சட்டத்தில் இல்லை. ஆயினும், இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு பணியாகும். கொள்முதல் வலையமைப்பிற்குள் புதிய மாநிலங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இதர வகை தானியங்களின் கொள்முதல் அதிகரிக்கப்பட வேண்டும். இத்தகைய கொள்முதலுக்கு ஏற்ற வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது குறித்து ஆராயப்பட வேண்டும். மேலும், மாவட்ட அளவில் அல்லது வட்டார அளவில் இருக்கக்கூடிய உள்ளூர் முன்மாதிரி அமைப்புகளை வளர்க்கும் வகையிலும், ஒருங்கிணைத்தல், உணவு தானியங்களை விநியோகித்தல் ஆகிய பணிகளில் இந்திய உணவு கழகத்தின் பங்களிப்பு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த சட்டத்தின் கீழ் அனைவருக்குமான பேறுகால உரிமைகளை வழங்குவதற்கான பணிகள் இதே போல் மேற்கொள்ளப்பட வேண்டும். தகுதி வரையறைகள், விநியோக ஏற்பாடுகள் மற்றும் கடமைப் பொறுப்புக்கான நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைக்கு மத்திய அரசின் சார்பில் சுமார் 50 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள முன்மாதிரித் திட்டங்கள், தமிழ்நாடு, ஒடிசா போன்ற ஆகிய மாநிலங்களின் திட்டங்கள் ஆகியவற்றைத் தவிர, விரிந்த அளவில் பேறுகால உரிமைகளை செயல்படுத்துவது தொடர்பான அனுபவங்கள் இல்லை. இந்த திட்டங்கள் அனுபவங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டும். தாய்பால் வழங்குதல், தாய்மார்களுக்கு ஓய்வு அளித்தல், ஊட்டச்சத்து கிடைக்கச் செய்தல் ஆகியவற்றில் இந்தத் திட்டங்கள் எந்த அளவிற்கு பலனளித்துள்ளன என்பதும் ஆராயப்பட வேண்டும். திட்டங்கள் பயனுள்ள முறையில் அமைவதற்கு எவ்விதமான நிபந்தனைகளோடும் அவற்றை இணைக்கக்கூடாது. அதே நேரத்தில்

தாய்ப்பால் குறித்த ஆலோசனைகளை வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாடு சேவைத் திட்டங்களின் கீழ் தாய்மார்களுக்கு கூடுதல் ஊட்டச்சத்து கிடைக்கச் செய்தல் போன்ற ஏற்பாடுகள் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். மாநில அரசுகளுக்கு நிதிச் சுமை அதிகரிக்காத வகையில் மத்திய – மாநில அரசுகளுக்கு இடையே செலவுகளைப் பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் உருவாக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றுப்பட்டுவிட்ட நிலையில் அது வழங்குகிற சட்டப்பூர்வ உரிமைகள் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கான நேரம் இதுவே ஆகும். சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்து குறைகூறுகிறவர்கள், தற்போதுள்ள பொது விநியோக முறையை மேலும் சமமான முறையில் மேலும் எளிமையான முறையில் மறு உருவாக்கம் செய்வதன்றி வேறு எதையும் இந்தச் சட்டம் செய்துவிடப் போவதில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதன் விளைவாக, பெருமளவுக்கு உரிய மக்கள் விலக்கி வைக்கப்படுகிற தவறுக்கு இட்டுச் சென்ற, வறுமை விகிதத்துடன் இணைக்கப்படுவது என்ற நடைமுறையிலிருந்து பொது விநியோகம் விலகிச் செல்லும். பல மாநிலங்களில் ஏற்கெனவே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. மற்ற மாநிலங்களுக்கும் இப்போது அந்த வாய்ப்பு கிடைக்கிறது. கூடுதல் செலவு ஏற்படுகிறது என்பதைவிட, உணவு உரிமையை இது சட்டப்பூர்வமாக கட்டாயமாக்கப்பட்டுள்ள உரிமைகளுக்குள் கொண்டு வருகிறது என்பது முக்கியமானதாகும். பட்டினிக்கு முடிவு கட்டுவதில் அரசின் கடமைப் பொறுப்பை வலியுறுத்துவதற்கான ஒரு கருவியாக இந்தச் சட்டம் விளங்க முடியும்.

ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படவில்லை. இந்த சட்டத்தின் கண்ணோட்டம் இப்போதும் குறுகியதாகவே இருக்கிறது என்பது ஒரு வகையில் ஏமாற்றமளிக்கத்தான் செய்கிறது. பரவலாக்கப்பட்ட கொள்முதல், போதுமான தானியங்கள், பயறுகள், எண்ணெய் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைவருக்குமான பொது விநியோகம், நலிவுற்றோருக்கும் முதியோருக்கும் பட்டினியில் கிடப்போருக்கும் கடுமையான அளவுக்கு ஊட்டச்சத்து குறைந்த குழந்தைகளுக்கும் சிறப்பு தலையீடுகள் போன்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. இவற்றையெல்லாம் இணைப்பது இந்த சட்டத்திற்கான செலவுகளை அதிகரிக்கும் என்றாலும் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி பட்டினியையும் ஊட்டச்சத்தின்மையையும் எதிர்த்துப் போராடுவதில் செயலற்று இருப்பதற்கான செலவு என்ன என்பதுதான்.

ஆதாரம்: **Economic & Political Weekly, Sep. 28, 2013**

பஞ்சாயத்து தலைவர் அதிகாரம் பறிப்பு

## தமிழக அரசின் உத்தரவுக்கு ஐகோர்ட் கிளை தடை

மதுரை அக்.12

கிராம பஞ்சாயத்துகளில் செயலாளரை நியமிக்க தலைவருக்கு அதிகாரம் கிடையாது என அரசு பிறப்பித்த உத்தரவுக்கு ஐகோர்ட் கிளை இடைகால தடை விதித்துள்ளது.

நெல்லை மாவட்டம் புதுக்குடி பஞ்சாயத்து தலைவர் கோபிராஜ், ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்த மனு:

பஞ்சாயத்து செயலாளர்களை (உதவியாளர்) நியமிக்க, பஞ்சாயத்து தலைவர்களுக்கு அதிகாரம் உண்டு. அதன்படி புதுக்குடி பஞ்சாயத்து செயலாளராக கனிராஜ்என்பவரை நியமனம் செய்தோம். இந்த நியமனத்தை அங்கீகரிக்க நெல்லை கலெக்டரின் நேர்முக உதவியாளர் மறுத்துவிட்டார்.

பஞ்சாயத்து செயலாளரை நியமிக்க பஞ்சாயத்து தலைவர்களுக்கு அதிகாரம் கிடையாது என தமிழக கிராம பஞ்சாயத்து செயலாளர், செப்.24ல் உத்தரவிட்டிருப்பதாகவும், எனவே, கனிராஜ்நியமனத்தை அங்கீகரிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. தமிழக கிராம பஞ்சாயத்து செயலாளரின் உத்தரவு சட்டவிரோதமானது. பஞ்சாயத்து தலைவர்களின் அதிகாரத்தை பறிப்பதாகும். எனவே, அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். தடை விதிக்க வேண்டும். உதவியாளரை நியமிக்க தலைவருக்கு அதிகாரம் வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

மனுவை நீதிபதி நாகமுத்து விசாரித்து, அரசின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

**ஆதாரம்: தினகரன், அக்டோர் 2 2013**

# தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் ஊராட்சித் தலைவரின் உண்மைக் கதை

## திருமிகு. குணபூஷனம்

**ஈச்சிபுதூர் ஊராட்சி, காவேரிபாக்கம் ஒன்றியம்**
**வேலூர் மாவட்டம்**

இரண்டு முறை வார்டு உறுப்பினராகவும் இரண்டாவது முறை ஊராட்சித் தலைவராகவும் கடந்த 18 வருட காலமாக ஊராட்சியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இவர், அனுபவமுள்ள தலைவராக வலம் வரும் இவர், மக்களின் நாடித் துடிப்பைக் கண்டறிந்து செயல்படுபவர். இவரது பெயர் குணபூஷனம்.

இவர் இரண்டு முறை வார்டு உறுப்பினராக இருந்தாலும் முதன் முறையாக 2006ஆம் ஆண்டு ஊராட்சித் தலைவருக்குப் போட்டியிட்டபோது தலித் என்பதாலும் பெண் என்பதாலும் பல சவால்களைச் சந்தித்துக் கொண்டே இருந்துள்ளார். தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியான பெண்ணாக இருந்தாலும் ஆதிக்க சாதியினர் பிடியில் ஊராட்சி இருந்தபடியால் இவரை எதிர்த்து 9 நபர்கள் போட்டியிட்டனர். இவர்களைப் பின்னடைய வைத்து குணபூஷனம் வெற்றி பெற்றுள்ளார். அப்போது துணைத் தலைவராக ஆதிக்க சாதியான நாயுடு சமூகத்தைச் சேர்ந்த வாசுதேவன் என்பவர் இருந்தபடியால் ஊராட்சியில் பல சவால்களை சந்தித்துள்ள குணபூஷனம், வார்டு உறுப்பினர்கள் ஒத்துழைப்பும் இல்லாமல் ஊராட்சிப் பணியை சரிவர செயல்படுத்த முடியாமல் பொது மக்களிடம் அவப்பெயர் வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருந்துள்ளார்.

இப்படியான சூழ்நிலையில் 2011ம் ஆண்டு ஊராட்சித் தேர்தலில் ஈச்சிபுதூர் ஊராட்சி ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டதால் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். இவரது ஊராட்சி உள்ள காவேரிபாக்கம் ஒன்றியத்தில் 55 ஊராட்சிகள் உள்ளன. இதில் ஊராட்சித் தலைவர்களின் கூட்டமைப்புத் துணைத் தலைவராகவும் இருக்கிறார் இவர். இதனால், இந்த ஒன்றியத்தில் இருக்கும் ஊராட்சித் தலைவர்களுக்கு எந்த ஒரு பிரச்சனை இருந்தாலும் கூட்டமைப்புத் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தில் கூடி இருதரப்பினரையும் வரவழைத்து பிரச்சனைக்கான ஆலோசனைகள் வழங்கி இரு தரப்பினரும் சமாதானமாக செல்ல தீர்வு காண்பார்கள். இவர்கள் ஆலோசனைகளை ஏற்காவிட்டால் மட்டுமே வட்டார வளர்ச்சி அலுவலர் (B.D.O), வருவாய்த்துறை அலுவலர் (R.D.O) , ஆட்சியரிடம் முறையிட வேண்டிய சூழ்நிலை அமையும். அந்த அளவுக்கு குணபூஷனம் காவேரிபாக்கம் ஒன்றியத்தில் முக்கியமானவராக உள்ளார்.

இவ்வகையில் சிறப்பாகச் செயல்படும் குணபூஷனம் சில ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் பின் வாங்கும் சூழ்நிலையில்தான் உள்ளார். மக்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டுமோ என்கின்ற அச்சமும் இவரைப் பின்னடைய வைக்கிறது. அதேபோல் 40 ஆண்டுகள் அனுபவத்தில் இருக்கும் ஆக்கிரமிப்பு நிலங்களை எப்படி அகற்றுவது என்கின்ற தயக்கத்திலும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இவர் இருளர்களுக்காக ஒரு காலனி உருவாக்கி அதில் இருளர் மக்களை குடியும் அமர்த்தி உள்ளார். இவர்களுக்கு மின்சாரம், தண்ணீர் வசதியும் பெற்றுக் கொடுத்த இவர் பட்டா வாங்கிக் கொடுப்பதில் மட்டும் சிரமம் இருப்பதாகத் தெரிவிக்கிறார்.

இவர் மக்களின் ஆதரவை பெற்றுள்ளார். சென்ற ஆட்சியில் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் வீட்டு வசதித் திட்டம் மூலம் 75 வீடுகள் இந்த ஊராட்சிக்கு கிடைக்கப் பெற்றது. இதில் பாதி நபருக்கு வீடு கட்டி முடித்தாகிவிட்ட நிலையில், மாநிலத்தில் ஆட்சி மாறி அதிமுக ஆட்சிக்கு வந்ததால் மீதமுள்ளவர்களுக்கு அதிமுக ஆட்சிக்கு மாறியதால் கட்ட இருந்த வீடுகள் கட்ட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், ஊராட்சி மக்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு அதனால் பெரிய பிரச்சனைகளை சந்தித்துள்ள குணபூஷனம் பல எதிர்ப்புகளையும் சந்தித்துள்ளார். இதை மக்களுக்கு புரிய வைப்பதற்கு குணபூஷனம் நிறைய சிரமப்பட்டு ஒவ்வொரிடமும் தனித் தனியாக விவரமாக எடுத்துரைத்து சமாதானம் செய்துள்ளார்.

ஊராட்சியில் இருக்கும் தொடக்கப் பள்ளியில் அந்த ஊரைச் சேர்ந்த திரு. இராமதாஸ் ரெட்டியார் என்பவரின் நினைவாக அவரின் மகனிடம் நிதி பெற்று உணவறை ஒன்று கட்டியுள்ளார். இந்த ஊராட்சியில் MRF கம்பெனி, டான்பாஸ்கோ பள்ளி, ராஜராஜேஸ்வரி கல்லூரி, கல்விக்கோட்டை பள்ளி, ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளது. கம்பெனிகள் வரிகட்டுவது மட்டும் அல்லாமல் கம்பெனிகளிடம் நிதி வசூல் செய்து, அதைப் பள்ளி மாணவ மாணவியருக்கு சீருடை, நோட் புக், நாற்காலி மேஜை மற்றும் இவர்களுக்கு தேவையான சில பொருட்கள் வாங்கி கொடுக்கிறார். இங்கு படிக்கும் குழந்தைகள் பள்ளியை சுமையாக நினைக்காமல் இருப்பதற்காக சில வசதிகளை செய்து கொடுத்துள்ளார்.

2011 ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு ஊராட்சியில் பசுமை வீடு திட்டம் மூலம் 2011–2012ல் 55 வீடும் 2012 2013 இந்திரா குடியிருப்புத் திட்டம் மூலம் 26 வீடுகளும் 2013 2014ல் பசுமை வீடுகள் 36ம் பெற்று இருக்கும் இவர் இவ்வாறு கிடைத்த வீடுகளை ஆதிதிராவிடர்,

பழங்குடியினர், இதர சாதியினர் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்துள்ளார் மற்றும் இந்த ஊராட்சியில் அங்கன்வாடி ஒன்று குழந்தைகளுக்கு புதிதாகக் கட்டிக் கொடுத்து இதன் உள்ளே தண்ணீர் டேங்க், கழிவறையும் கட்டிக் கொடுத்துள்ளார். பள்ளியில் ஊனமுற்ற குழந்தைகளுக்கு தனியாகக் கழிவறையும் கட்டிக் கொடுத்துள்ளார்.

இங்கு 3 ரேஷன்கடை உள்ளது. மொத்தம் 1480 கார்டு உள்ளது. ஒவ்வொரு கடைக்கும் சென்று கண்காணிக்கிறார். சோலார் விளக்கு 25 புதிதாக அமைத்துள்ளார். மகாத்மா காந்தி ஊரக வேலை மூலம் 1800 கார்டுகள் அளிக்கப்பட்டு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. 1500 தெரு விளக்கும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். தண்ணீர் குழாய் 2000 நபர்களுக்கும் 12 பெரிய தண்ணீர் தொட்டியும், ஆடு 108 நபர்களுக்கும் எரிமேடை 21ம் ஊராட்சியில் 2 நூலகமும் அங்கன்வாடி 6ம், மூன்று தொடக்கப் பள்ளியும் (இதில் ஒன்றாம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை) உள்ளது. ஈச்சிபுதூர் ஆரம்பப் பள்ளியில் 118 குழந்தைகள் படிக்கின்றனர். சாலை வசதி, மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஒரு மின் கடத்தியை(Transformer) நிறுவியுள்ளார்.

ஊராட்சியில் 47 ஏக்கர் மேய்ச்சல் புறம்போக்கு நிலம் உள்ளது. இந்த நிலத்தை குடிமனையாகத் தேர்வு செய்து குடியிருப்பு இல்லாமல் இருக்கும் மக்களுக்குக் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்திருக்கிறார். ஊராட்சியில் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றி கிராமசபா கூட்டத்தில் படித்து ஒப்புதல் பெற்று அமல்படுத்தி வரும் இவர், மாதாந்திரம் கூட்டப்படும் சுய உதவிக் குழு கூட்டத்திலும் ஊராட்சிக்கு என்னென்ன திட்டங்கள் வந்திருப்பது என்பதையும் அதை எப்படி செயல்படுத்தலாம் என்கின்ற விவாதத்தை உருவாக்கி பெண்களிடம் கேட்டு சில ஆலோசனையும் தெரிவித்து ஊராட்சியின் மேம்பாட்டிற்கான பணியைச் செய்கிறார்.

8ம் வகுப்பு வரை படித்துள்ளார். மூன்று பிள்ளைகள் 2 ஆண், 1 பெண். பெண்ணுக்கு திருமணம் ஆகிவிட்டது. இவரது கணவர் விவசாயி. குணபூஷனத்தினுடைய குடும்பம் இவரின் ஊராட்சிப் பணிகள் எல்லாவற்றுக்கும் உதவியாக இருக்கிறது. இவரது குடும்பம் கூட்டுக் குடும்பம். குழந்தைகள் படிப்புக்காக திருத்தணியில் இப்பொழுது குடியிருக்கிறார். 4 ஏக்கர் நிலம் உள்ளது. இவரது கணவர் இதில் விவசாயம் செய்து கொண்டு ஊராட்சிப் பணியில் சில உதவிகளை செய்கிறார்.

இப்பொழுது மக்களுக்கு ஒரு திருமண மண்டபம் கட்ட வேண்டும் என்கின்ற முயற்சியில் இருக்கிறார். தற்போது திருமண மண்டபத்திற்கு பக்கத்து ஊரில் அதிகமாக வாடகை வசூலிப்பதால் சாதாரண மக்கள் தன் மகளுக்கோ மகனுக்கோ திருமணம் மற்றும் சில குடும்ப விசேஷங்கள் செய்வது மிகவும் கடினமாக உள்ளது. இதனால், கிராம மக்கள் மிகவும் அவதிக்கு உள்ளாவதால் தனது ஊரிலேயே ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கு தகுந்த சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார். இங்கு மக்கள் தொகை 5400. இங்கு வசிப்பவர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர், ரெட்டியார், செட்டியார், குறவர், நாயுடு, ஆச்சாரி, பாளயக்காரர், யாதவர் ஆகும். வாக்காளராக தகுதி பெற்று 4000 நபர்கள் உள்ளனர். 21 கிராமம் இந்த ஊராட்சியில் உள்ளது. அவை முறையே ஈச்சி புதூர், ஈச்சிபுதூர் காலனி, ஈச்சி புதூர் மேட்டுத் தெரு, அருந்ததியர் காலனி, MRF திருநகர், செக் போஸ்ட் என்கின்ற ரெட்டை குளம், முனியப்ப நாயுடு கண்டிகை, சின்ன மோட்டூர், அமீர்பேட்டை, இளவர சண்டிகை, நீல கண்டபுரம், இருளர் காலனி, சின்ன எல்லாபுரம் தாலூர் கண்டிகை, ஐயப்பந்தாங்கல் கண்டிகை, ஐயப்பன்தாங்கல் காலனி, ஐயப்பன்தாங்கல் ஊர், பெரிய இஸ்லாபுரம் காலனி, பெரிய இஸ்லாபுரம், இருளர் காலனி, அம்பேத்கர் நகர், அம்பேத்கார் மேட்டுத் தெரு ஆகும். 2011ம் ஆண்டு ஊராட்சித் தேர்தலில் குணபூஷனத்தை எதிர்த்து பிரவீணா, தாரா, ஸ்டெல்லா, இந்திரா, ராதா ஆகிய 5 நபர்கள் போட்டியிட்டார்கள் . 4000 வாக்குப் பதிவில் போட்டியிட்டவர்களைவிட இவர் 77 ஓட்டு அதிகம் பெற்று வெற்றி அடைந்துள்ளார். ஊராட்சியில் இரண்டாவது முறையாக ஊராட்சித் தலைவியாக பதவி ஏற்ற பின் சுகாதார மைய முகாம், கண் சிகிச்சை முகாம், கால்நடை முகாம் நடத்தியுள்ளார்.

இவர் நடத்தும் கிராம சபைக் கூட்டங்களில் 350லிருந்து 400 நபர்கள் வரை கலந்துகொள்கிறார்கள் 100 நாட்கள் வேலை செய்யும்போது அந்த இடத்திற்குச் சென்று கண்காணிப்பது மட்டும் அல்லாமல் மக்களின் குறைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். இந்த கிராமத்தில் படித்தவர் 70 சதவீத மக்கள். இவர்கள் அரசுப் பணிகளிலும் சில கம்பெனிகளிலும் பணிபுரிகிறார்கள். பூச்செடி விவசாயம் அதிகமானதாக இருக்கிறது. அத்துடன் வேர்கடலை, கரும்பு விவசாய வேலையும் நடைபெறுகிறது. இங்குள்ள MRF கம்பெனியில் பெருமளவு நபர்கள் படித்தவர்கள் படிக்காதவர்கள் அனைவரும் பணிபுரிகின்றனர். புதிதாக வீட்டுக்கு ஒரு கழிப்பிடம் கட்டுவதற்கான ஏற்பாடு செய்து வருகிறார். மக்கள் பெருமளவு மேம்பாடு அடைந்த கிராமமாக இந்த ஊராட்சி இருக்கிறது. அதுமட்டும் அல்லாமல் ஊராட்சிப் பள்ளிக்கு தனியாக ஊராட்சி நிதியில் 6000 ரூபாய் கொடுத்து ஒரு ஆசிரியரையும் அமைத்துள்ளார்.

இவ்வளவு திறமைகளும் பெற்ற இவர், வருங்காலங்களில் சட்டமன்ற உறுப்பினர் (எம்.எல்.ஏ.) தேர்தலில் போட்டியிடும் திட்டத்தில் இருக்கிறார். 20 வருட ஊராட்சியில் செயல்பட்டதற்கான அங்கீகாரம் கிடைத்தால் மட்டும் போதாமல் பெண்கள் முன்னேறுவதற்கான அங்கீகாரமும் கிடைக்கணும் என்பதே இவரது ஆசை, எண்ணம் ஆகும்.

**– மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

# பாராளுமன்றத் தேர்தல் 2014

## மக்களின் மாற்று அரசியல் கோரிக்கை வெளியீடு

*வரும் பாராளுமன்றத் தேர்தலையொட்டி மக்களின் மாற்று அரசியல் கோரிக்கை வெளியிடப்படுகிறது. இந்த மாற்று அரசியல் பெண்கள், தலித் மக்கள், ஆதிவாசி மக்கள், அடித்தட்டு ஜனநாயகம், நிலச் சீர்திருத்தம் மற்றும் நிலம் கையகப்படுத்துதல், கல்வி மற்றும் குழந்தைகள், கடலோர மக்களின் வாழ்வாதாரம், காவல்துறை மற்றும் சிறைத்துறையில் தேவைப்படும் சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் நலன்களை உள்ளடக்கியதாக இருக்கும்.*

### நிலம்

**நிலம் கையகப்படுத்தலில் நியாயமான இழப்பீடு, வெளிப்படைத் தன்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு சட்டம், 2013** ஏழை மக்களின் நலன்களுக்கு எதிராக உள்ளதால் திரும்பப் பெறப்பட வேண்டும். கடலோர மக்கள் உள்ளிட்ட அனைத்து ஏழை மக்கள் அப்புறப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பொது வளங்கள் மீதான அரசின் உரிமையை மீறிய மக்களின் உரிமை மற்றும் மக்களுடைய பாரம்பரிய வாழ்விடங்கள் மீதான உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.தொழில் திட்டங்களுக்காக விவசாய விளை நிலங்களை கையகப்படுத்தக் கூடாது. விளை நிலங்கள் விற்கப்படலாம். ஆனால், அங்கு விவசாயம் மட்டுமே நடைபெற வேண்டும். வீட்டு மனைகளுக்கோ, பள்ளி, கல்லூரி கட்டிடங்களுக்கோ, தொழிலில் சார்ந்த கட்டிடங்களுக்கோ விவசாய விளை நிலங்கள் விற்கப்படக் கூடாது. நில கூட்டுறவு சங்கம் கிராமங்களில் ஏற்படுத்தி உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். சிறப்பு உட்கூறு திட்ட நிதியின் மூலம் தலித் மக்களுக்கு பாசன வசதியுடன் கூடிய நிலம் வழங்கப்பட வேண்டும். அரசு நிலங்களில் குடியிருக்கும் மக்களை அகற்றும்போது அவர்களின் வாழ்வாதார உரிமையை பாதுகாப்பதற்காக அருகாமையிலேயே குடியேற்ற வேண்டும். சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விவசாய நிலங்களை அரசு இனிமேல் கையகப்படுத்தக் கூடாது. அன்னிய பன்னாட்டு நிறுவனங்களுக்காக நமது நிலங்களை அரசு கையகப்படுத்துதல் கூடாது. புதிய பொருளாதாரத்தை உள்ளடக்கிய தொழில் நகரங்களுக்கு மான்யம், சலுகை வழங்கல்களை நிறுத்தி உள்ளூர் விவசாயிகளுக்கு அவை வழங்கப்பட வேண்டும்.

**பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாழ் (வன உரிமை அங்கீகரிப்பு) சட்டம் 2006** முறையாக அமல்படுத்தப்பட வேண்டும். இந்த சட்டத்தின்படி வனங்களில் உள்ள பல்வேறு எஸ்டேட்களும் வனங்களிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். மலை, வனங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களை சரணாலயம், தொழில் திட்டம் மற்றும் பிற காரணங்களுக்காக வெளியேற்றக் கூடாது. காடுகளை அழிப்பதை தடுக்க வேண்டும். பழங்குடியின மக்களின் நிலங்களில் இருந்து பிற சாதி ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

**பஞ்சமி நிலங்கள்:** மாவட்ட அளவில் “பஞ்சமி நிலங்களை” கண்டறிந்து ஆவணப்படுத்த குழு (committee ) அமைக்க வேண்டும். தமிழகத்தில் பஞ்சமி நிலத்தை மீட்டு உரிய மக்களுக்கு வழங்க வேண்டும். பஞ்சமி நில மீட்பிற்கு தனி சட்டம் வேண்டும்.

**கடலோர நிலங்கள்:** கடலோர நிலங்கள் மற்றும் மீனவ மக்கள் பயன்பாட்டில் உள்ள நிலங்களில் எவ்வித அழிவு பூர்வமான திட்டங்கள் வருவதை தடை செய்ய வேண்டும். கடலோர பகுதியில் அழிவுபூர்வமான தொழில் திட்டங்களை ஏற்படுத்தி கடலோர மக்களை வெளியேற்றும் நிலைப்பாடுகளை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். சுற்றுசூழல் சட்டத்தை பயன்படுத்தி நிலங்களைப் பாதுகாக்க வேண்டும். சட்ட விதிகளுக்குப் புறம்பாக செயல்படும் மணல் குவாரிகளை தடை செய்ய வேண்டும். கடலோரப் பகுதிகளில் அனல், அணுமின் நிலையங்கள், ரசாயனத் தொழிற்சாலைகள், வணிகரீதியான சுற்றுலா என்ற பெயர்களில் வாழ்விடங்களை அழிப்பது, பறிப்பது, வெளியேற்றுவது ஆகியவை உடனடியாக நிறுத்த வேண்டும்.

**உள்ளாட்சி நிலங்கள்:** நிலம் மற்றும் கனிம வளங்கள் தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டும். உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை உள்ளாட்சி அனுமதியின்றி தொழில் நிறுவனங்களுக்கு அரசு கையகப்படுத்துதல் கூடாது. கிராமங்களின் குடியிருப்பு திட்டங்களுக்கு 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட வேண்டும். பொது வளங்களை அரசு எடுத்தாலும் (அ) தனியாருக்கு வழங்குவதாக இருந்தாலும் பஞ்சாயத்து (ம) கிராம சபையின் ஒப்புதலோடு செயல்படுத்த வேண்டும். அனுமதி பெற்றதோடு மட்டுமின்றி விதிகளை மீறி அனுமதி பெறாத இடங்களிலும் வளங்களை எடுக்கும் காலகட்டத்தில் உள்ளாட்சியே அதை தடுக்கும் முழு அதிகாரம் வழங்கப்பட

வேண்டும். ஒவ்வொரு உள்ளாட்சி அளவிலும் பொது வளங்கள் (ஏரி, குளம், குட்டை, நில வகைகள், கனிம வளங்கள் (ம) பிற வாழ்வாதார வளங்கள் பற்றிய விவரம் தகவல் பலகையில் வெளியிடுதல் வேண்டும்.

## கல்வி மற்றும் குழந்தைகள்

கல்வியின் நோக்கமே – ஒரு ஜனநாயக – சமத்துவ – மதச்சார்பற்ற மனித சமூக அமைப்பைக் கட்டி எழுப்புவதற்குத் துணை புரிவதே ஆகும். ஒவ்வொரு தனி மனிதரிடத்திலும் உள்ள ஆற்றலை வெளிக் கொணர்ந்து அதை வெகு மக்களின் நலனுக்கும், வளர்ச்சிக்கும் பயன் தரக்கூடிய வலுவான கருவிதான் கல்வி. சமத்துவமான சமூக வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் வழியமைத்துத் தருவதும் கல்வி தான். வெகு மக்களின் நலத்திற்கான அறிவாற்றலை உருவாக்குவதில், கல்வி முக்கியப் பங்காற்றுகிறது. லாபநோக்கோ, அடுத்தவர்களை அடிமைப்படுத்துதலோ, அல்லது அதிகார மையங்களை உருவாக்குவதோ, கல்வியின் அடிப்படை நோக்கமல்ல. நிச்சயமாக கல்வி, சந்தையில் விலை பேசக் கூடிய ஒரு பொருளோ, அல்லது வர்த்தக சேவையோ அல்ல.

நமது அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமையில் 21ஏ பிரிவு அனைவருக்கும் இலவசமான தரமான கல்வியை உறுதி செய்திருந்தாலும், பெரும்பாலும் நமது குழந்தைகளுக்கு, அது இன்னும் கிட்டாமலே இருக்கிறது. அனைவருக்கும் – சமத்துவமான பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற் கல்வியை வழங்க வேண்டும் என்று அரசியல் சட்டம் வலியுறுத்தும் கடமையை நிறைவேற்றாமல், பல ஆண்டுகளாகவே, அரசு தட்டிக் கழித்து வருகிறது. கல்விக்கான வாய்ப்புகளை வழங்குவதில் வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு – வெவ்வேறு தரத்தில் கல்வி வழங்கப்படுகிறது. கல்விக்கான கொள்கை உருவாக்கத்திலும் – திட்டமிடலிலும் சந்தை சக்திகள் (தனியார் துறை) நுழைவதற்கான கதவுகள் திறந்து விடப்பட்டன. அரசுதான், அனைவருக்கும் சமமான ஏற்றத் தாழ்வுகளற்ற கல்வியை வழங்கவும், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யவும், அரசியல் சட்ட ரீதியாகக் கடமைப்பட்டிருக்கிறது.

அருகாமையிலிருந்து பள்ளியில் சேருவதற்கு வரும் குழந்தைகளை – முன்னுரிமை அடிப்படையில் எந்தத் தேர்வு முறைகளும் இல்லாமல், பள்ளிகளில் சேர்ப்பது ஒவ்வொரு பள்ளியின் கடமையாகும். எல்லா வகுப்புகளில் சேருவதற்கும், இதே முறையையே பின்பற்ற வேண்டும். உலகில் – இப்போது 60 நாடுகளில் 'பொதுப் பள்ளி முறை' அமலில் உள்ளது. இன்று வளர்ச்சியடைந்துள்ள நாடுகள் – இந்தக் கல்வி முறையினால் மட்டுமே வளர்ச்சியில் இந்த நிலையை எட்ட முடிந்தது. அருகாமையில் உள்ள பள்ளிகளில் சேர்ந்து படிக்க எல்லா குழந்தைகளுக்கும் வாய்ப்பளித்து, அனைவருக்கும் பொதுவான பாடத் திட்டம், ஒரே கல்வி நிர்வாகம் – தமிழ் வழிக் கல்வி, முழுமையான அரசின் நிதி ஒதுக்கீடு என்ற கட்டமைப்பை உருவாக்குவதுதான் – சமச்சீர் கல்வியின் அடிப்படையாகும்.

**சமச்சீர் கல்விமுறையில் – சமரசம் செய்யக் கூடாதவை.**

– பள்ளிக் குழந்தைகளில் – கணிசமானவர்கள் படிப்பை பாதியில் விட்டுவிடுகிறார்கள். அதன் பிறகு, அவர்கள் – குழந்தை தொழிலாளர்களாக வேலை வாங்கப்படுகிறார்கள். இந்தப் போக்கு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். காரணம் – இலவச – தரமான – சமத்துவமான கல்வியை அனைவருக்கும் சமமான தரத்தில் வழங்க வேண்டும் என்ற அடிப்படை உரிமைக்கே, இது எதிரானதாகும். வறுமையிலிருந்து விடுபடுவதற்கும், குழந்தை நிலையிலேயே வேலைக்கு செல்ல வேண்டிய நிலையிலிருந்தும் விடுபடுவதற்கும் – கல்வி, ஏழைகளுக்கு மிக அவசியமான ஊன்றுகோலாகும்.

– பல்வேறு கல்வி வாரியங்களை ஒழித்து, ஒரே கல்வி வாரியத்தை அரசு அமைக்க வேண்டும். அனைத்துப் பள்ளிகளையும், இந்த நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்து, குழந்தைகளின் தேவைக்கேற்ற கல்வியை வழங்க வேண்டும்.

– 12 ஆம் வகுப்பு வரை எல்லா குழந்தைகளுக்கும் கட்டாயமான இலவசக் கல்வியை (குழந்தைகளுக்கு எந்தச் செலவும் இல்லாமல்) ஏற்றத் தாழ்வுகளற்ற பொதுப் பள்ளி மூலம் வழங்குவதும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்வதும் அரசின் அடிப்படையான கடமையாகும். அத்துடன், அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கிடையே சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும்; அதன் வழியாக 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பராமரிப்புகளையும், அவர்களுக்கான கல்வியையும் அரசு வழங்க வேண்டும், இது அரசின் அடிப்படைக் கடமையாகும்.

– கல்வி – தனியார் வர்த்தகத்துக்கு திறந்துவிடப்பட மாட்டாது என்ற நிலையை – அரசு எவ்வளவு விரைந்து உருவாக்க முடியுமோ, அவ்வளவு விரைந்து உருவாக்க வேண்டும். லாபம் ஈட்டக்கூடிய வர்த்தக மையமாக எந்தப் பள்ளியும் செயல்படக் கூடாது. அடுத்த 3 ஆண்டுகளுக்குள் அரசுப் பள்ளிகள் மட்டுமே இயங்க முடியும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். 12 ஆம் வகுப்பு வரை

அனைத்து தனியார் பள்ளிகளும் தடைப்படுத்தப்பட்டுவிட்டன என்ற நிலை வர வேண்டும்.

- கற்பவர் தங்களுக்கு விருப்பமானவற்றை தேர்வு செய்து கொள்ளும் வகையில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக வேண்டும்.
- ஆங்கிலம், தேவையான மொழி என்ற அடிப்படையில் அனைத்துப் பள்ளிகளிலும், மேலும் சிறந்த ஆற்றலோடு கற்பிக்க வேண்டும்.
- தற்போதுள்ள இடஒதுக்கீடு முறை அனைத்துப் பள்ளிகளிலும், கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.
- 18 வயதுக்குட்பட்ட அனைவருக்கும், பொதுப் பள்ளி அமைப்பு வழியாக சமச்சீர் கல்வியை வழங்குவதற்கான ஒருங்கமைந்த கல்விச் சட்டம் ஒன்றை அரசு இயற்ற வேண்டும்.
- உரிய கல்வித் தகுதியுடைய ஆசிரியர்களை முறையான ஊதியத்தோடு, போதுமான எண்ணிக்கையில் நியமிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் கல்விப் பணிகளை செம்மையாக ஆற்றிடவும், மாணவர்களுக்கு பயன்படவும், அவர்களின் கற்றலுக்கு தூண்டிடும் கருவியாக கடமையாற்றவும் வேண்டுமானால், குறைந்தது ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியராவது நியமிக்கப்பட வேண்டும்.
- அரசியல் சட்டம் வலியுறுத்துவது போல, பாடத்திட்டம், பள்ளி விதிமுறைகள், வகுப்பு நடைமுறைகள் போன்றவை கற்பவருக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய வகையிலும், குழந்தைகளின் நலன் கருதி அவர்களுக்கு எந்தவித தண்டனைகளையும் வழங்காத வகையிலும் இருக்க வேண்டும்.
- கல்வியானது, குழந்தைகளின் கேள்வித்திறன், கற்பனைத் திறன்களை ஊக்குவித்து, அவர்களை அதிகாரமிக்கவர்களாக மாற்றுவதற்கேயாகும். அரசு வகுத்துள்ள விதிமுறைகளுக்கேற்ப பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் அமைத்திருத்தல் வேண்டும்.
- **கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011ன் கீழ் முழுமையான அமலாக்கம் பற்றிய ஒரு அறிக்கையை அரசு சமர்ப்பிக்க வேண்டும். கல்வி உரிமைச் சட்டம் மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011ல் இயற்றப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளையும் நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக 6லிருந்து 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளும் அடுத்த கல்வியாண்டிற்குள் பள்ளியில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.**
- **குழந்தைகள் பள்ளி இடை விலகாமல் இருப்பதையும் மற்றும் எந்த ஒரு குழந்தையும் பள்ளிக்கு வெளியில் இல்லாமல் இருப்பதையும் அதாவது குழந்தைத் தொழிலாளராக இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் வெறும் அரசாணைகளின் மூலம் மட்டும் செய்யாமல், இவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.**
- **தமிழக அரசு, லாபம் சம்பாதிக்க கேபிடேஷன் (தலை) கட்டணம் வசூலிக்கப்படாமல் இருப்பதையும், எந்த ஒரு ஆசிரியரும் பள்ளியிலோ அல்லது பள்ளிக்கு வெளியிலோ சிறப்பு வகுப்புகள் எடுக்காமல் இருப்பதையும், அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் மூடப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.**
- அனைத்து துறைகளிலும் 18 வயது வரை குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட வேண்டும்.
- அனைத்து சட்டங்களிலும் குழந்தைகளின் வயது 18 என்று நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.
- **குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009** முறையாக அமல்படுத்தப்படுவதையும், அருகாமை மற்றும் பொதுப் பள்ளி முறையை உறுதிப்படுத்த வேண்டும். பாலியல் வன்முறை உள்ளிட்ட அனைத்து வகையான வன்முறைகள் மற்றும் பாகுபாடுகளும் நிறுத்தப்பட வேண்டும், தவறிழைப்போர் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.
- குழந்தைப் பாலினத்தைத் தெரிவு செய்வதை தடை செய்வதன் மூலம் குறைந்து வரும் பாலின விகிதம் தடுக்கப்பட வேண்டும்.

## காவல்நீதி:

காவல்துறை இன்று ஒரு அடக்குமுறை அமைப்பாக பார்க்கப்படுவது மட்டுமன்றி அவ்வாறுதான் நடந்துகொள்கிறது. இந்த நிலை மாற வேண்டும். அனைத்துப் பிரிவு மக்களும் அரசியல் சாசனத்தின்படி அவர்களின் தனித்துவமான மற்றும் கூட்டு உரிமைகளை முழுமையாக உணர்ந்துகொண்டு அனுபவிக்கும்

வகையிலான ஒரு சூழலை உறுதிப்படுத்துவதே காவல்துறையின் முதன்மை நோக்கமாக இருக்க வேண்டும். புதிய காவல் சட்டம் (அல்லது காவல்துறை) ஜனநாயகத்தின் உச்சபட்ச மதிப்பீடுகளையும் சுதந்திரத்தின் அளவீடுகளையும் உரிமைகளையும் உணர்ந்துகொள்ளும் வகையில் இருக்க வேண்டும். எனவே, புதிய காவல் சட்டம், சட்டத்திற்குக் கட்டுப்பட்ட, திறமையான, பாரபட்சமற்ற ஒரு காவல் படை உருவாகுவதற்கு வழிவகுக்க வேண்டும். மேலும், அத்தகைய காவல் படை அரசியல் சாசன சட்டத்தின் மதிப்பீடுகள் மற்றும் அறிவியல்பூர்வமான ஆய்வுகள் மற்றும் சட்ட அமலாக்கம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். சுதந்திரமான அதே நேரத்தில் பொறுப்புடைத் தன்மையோடு கூடிய ஒரு காவல் படை உருவாகுவதற்கான ஒரு நிர்வாக அமைப்பு முறை இருந்தால் மட்டுமே இது சாத்தியம்.

மேற்குறிப்பிட்டுள்ள கட்டமைப்பின்படி காவலர்கள் செயல்பட வேண்டும். அவர்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களாக மட்டும் செயல்படாமல் சட்டத்தை மேம்படுத்துபவர்களாக செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படாத காவல்துறை பொது மக்களின் நம்பிக்கை மற்றும் ஒப்புதலை பெற முடியாது.

குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 197 (Crpc) நீதிபதிகள். குற்றவியல் நடுவர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்களிக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் எனக் கூறுகிறது. அரசின் அனுமதி பெற்ற பிறகே நீதி மன்றங்கள் இத்தகைய வழக்குகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள முடியும். இவர்கள் பொதுமக்களுக்கு பதில் சொல்லும் கடமையில் இருந்து தவறி விடுகிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி மன்றங்கள் மூலம் நீதி கிடைக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 197 (Crpc) உடனடியாக நீக்கப்பட வேண்டும். (தேசிய மனித உரிமை ஆணையமும் (NHRC) தனது 1995–96 ஆம் ஆண்டில் வெளியிட்ட ஆண்டறிக்கையில் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளது.)

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 46 மற்றும் 49 ன் படி கைது செய்யும் போது பலப்பிரயோகம் உபயோகிப்பதைத் தவிர்க்கவும் என்று கூறுகிறது. அத்துடன் சர்வதேச மனித உரிமைத் தரங்களின் படியும் போலீஸ் பலப்பிரயோகத்தை மேற்கொள்ளக் கூடாது.

டி.கே.பாசு வழக்கில் உச்சநீதி மன்றம் எடுத்துக்கூறிய வழிகாட்டி நெறி முறைகளுக்கேற்ப காவல் துறையினர் செயல்படுதல் வேண்டும். விசாரணை என்ற பெயரில் காவல்நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டவர் மாயம் என்றும் போலீசாரின் சித்ரவதை காவல்துறை அலுவலர்கள் மீது உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளத்தக்கதாக ஜனநாயகத்தை உள்ளடக்கமாக கொண்டதாக மாற்றியமைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில், பொது மக்கள் சொத்துக்களை சூறையாடுவது, கூட்டத்தை அடக்குவதற்கு 6 அடி லத்தியைப் பயன்படுத்துவது, அமைதியான போராட்டங்களில் ஆயுதங்களைப் பயன்படுத்துவது, காவல் நிலையங்களில் சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்வது மற்றும் சித்ரவதை செய்வது, கைவிலங்கிடுவது, விசாரணைக் கைதிகளை சங்கிலியால் கட்டுவது உள்ளிட்ட நடைமுறையில் இருக்கும் கொடுமையான காவல்துறை நடவடிக்கைகள் தடை செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாடு காவல் சட்டம் 2013 உச்சநீதிமன்றத்தின் ஆணைகளை உள்ளடக்கியதாக இல்லை. உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களில் உள்ள காவல்துறையின் சுதந்திரம் மற்றும் பொறுப்புடைத் தன்மைக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் புதிய சட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. காவல்துறையில் தேவையற்ற அரசியல் தலையீடுகளை தடுப்பதற்காக உருவாக்கிய மாநில பாதுகாப்பு ஆணையம் புதிய சட்டத்தில் தீவிரமாக சமரசம் செய்யப்பட்டுள்ளது. காவலர்களின் பணிமாற்றம், இடமாற்றம் உள்ளிட்டவை அரசியல்வாதிகளின் கையில் இருப்பது போலவே புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. காவல்துறையில் நடைபெறும் முறைகேடு போன்றவற்றை ஒடுக்கும் வகையிலான திறமையான சுதந்திரமான ஒரு அமைப்பாக இந்தப் புதிய சட்டத்தில் காவல்துறை உருவாக்கப்படவில்லை. எதிர்கால காவல்துறையை நிர்வகிக்கும் எந்த ஒரு புதிய சட்டமும் நீதிமன்றத்தின் பரிந்துரைகளையும் புதுமையான காவல்துறைக்கான மதிப்பீடுகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், அதிகாரம் படைத்தவர்களுக்கு சாதகமாகவே காவல்துறை செயல்படும் என்ற எண்ணத்தை மாற்றும் வகையிலும் இருக்க வேண்டும். தற்போதைய புதிய சட்டம் அவ்வாறு இல்லை. எனவே, இது திரும்பப் பெறப்பட வேண்டும்.· பிரகாஷ் சிங் எதிர் இந்திய அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் காவல்துறை சீர்திருத்தங்கள் குறித்து வழங்கிய 7 வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய திருத்தங்களோடு கூடிய ஒரு முழுமையான தமிழ்நாடு காவல் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

- பிரகாஷ் சிங் எதிர் இந்திய அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் காவல்துறை சீர்திருத்தங்கள் குறித்து வழங்கிய 7 வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய திருத்தங்களோடு கூடிய ஒரு முழுமையான தமிழ்நாடு காவல் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

– காவல் நிலையங்கள், சிறைச்சாலைகளில் நிகழும் சித்ரவதைகள் மற்றும் அனைத்து விதமான கொடூர தண்டனைகள் தடுக்கப்பட வேண்டும். காவல் நிலையங்கள், சிறைச்சாலைகளில் நிகழும் காவல் நிலைய மரணங்கள், போலி மோதல் கொலைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் பிற வன்முறைகளுக்கும் அந்தந்த அதிகாரிகள் பொறுப்பாக்கப்பட்டு அவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும்.

## பெண்கள்

பல லட்சக் கணக்கான இந்திய பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் தலைமுறை தலைமுறையாக சந்தித்து வரும் அடக்குமுறை மற்றும் வன்முறைக்கு முடிவு கட்ட நாடு முழுவதும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். மாற்றத்திற்கான ஒரு அரசியல் நிலைபாட்டையும் தேவையான நிதி ஆதாரங்களையும் அவர்கள் கேட்கின்றனர். இவை, இந்திய பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் சமத்துவத்திற்கான கோரிக்கைகள்.

குற்றவியல் திருத்தச் சட்டம் 2013 உள்ளிட்ட பெண்கள் உரிமைகளுக்கான சட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளும் நிறுத்தப்பட வேண்டும். அரசாங்க மற்றும் காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்ட தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

**சமத்துவத்திற்கான கல்வி:** பாலின அடிப்படையில் பாகுபாடு மற்றும் வன்முறை கலாச்சாரத்திற்கு முடிவு கட்டும் வகையில், முழுமையான, போதிய நிதி ஆதாரம் மற்றும் தொலைநோக்கு பார்வையோடு கூடிய பொது கல்விக்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய திட்டங்களில் குறுஞ்செய்தி, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களின் மூலமான பிரச்சாரம், பள்ளிகளுக்கான பாடத்திட்டங்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் போன்றவர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் ஆகியவை இடம் பெற வேண்டும். இத்தகைய திட்டங்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள், பெண்கள், ஆண் மற்றும் பெண் குழந்தைகளை சென்றடைய வேண்டும்.

**சட்டங்களை அமல்படுத்த வேண்டும்:** பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவு கட்ட தேவையான சட்டங்களை அமல்படுத்த ஒரு விரிவான நடைமுறைத் திட்டங்களை போதிய நிதி ஆதாரத்தோடு ஒவ்வொரு அரசாங்கத்துறையும் தயாரிப்பதை உறுதிபடுத்த வேண்டும். வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முழுமையான உதவிகளை மாநில அரசு செய்ய வேண்டும். துரிதமான இழப்பீடு கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் ஒவ்வொரு காவல் மாவட்டங்களிலும் அவர்களுக்கான 24 மணி நேர பாதுகாப்பு மற்றும் ஆலோசனை மையங்களை அமைக்க அரசு உதவி செய்ய வேண்டும். கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் குழந்தைகளுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகளை தடுப்பதற்கு, குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல் உள்ளிட்ட ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை போதிய நிதி உதவியோடு அரசு உருவாக்க வேண்டும். மேலும், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் தேவையான விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசாங்கங்கள், பெண்களுக்கெதிரான வன்முறை குற்றங்களை விசாரிக்க பொறுப்பான மற்றும் நியாயமான விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும். மேலும், நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். இத்தகைய பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய இழப்பீடு, சட்ட உதவி ஆகியவை விரைவாக அவர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். பாலியல் வன்முறை வழக்குகளில் சாட்சிகளை பாதுகாப்பதற்கான திட்டங்களை அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

**பெண்களை அதிகாரத்துவப்படுத்துவது:** பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட வேண்டும். மேலும், கொள்கை மற்றும் நடைமுறை தொடர்பான அனைத்துக் குழுக்கள், கவுன்சில்கள் ஆகியவற்றில் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது உறுதி செய்யப்பட வேண்டும். பாலினம் சார்ந்த வன்முறைக் குற்றங்களில் ஈடுபட்ட தேர்தல் வேட்பாளர்களை தகுதி இழக்கச் செய்வதற்கும், மக்களவையில் பெண்களை இழிவுபடுத்தும் கருத்துகள் மற்றும் செயல்பாடுகளுக்கு முடிவு கட்டுவதற்கும் ஒரு நடத்தை விதி உருவாக்கப்பட வேண்டும். தேசிய மற்றும் மாநில பெண்கள் ஆணையங்கள் தன்னாட்சியோடு, அனுபவமிக்க நபர்களைக் கொண்டு, வெளிப்படைத் தன்மையோடு செயல்படுவது வலுப்படுத்தப்பட வேண்டும்.

**மக்களுக்கான காவல்துறை:** பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான நடவடிக்கைக்கு ஒரு முழுமையான செயல் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். திட்டம் குறித்து பொது மக்களுக்கு விளம்பரப்படுத்த வேண்டும். காவல்துறையினரின் பதவி உயர்வு மற்றும் தண்டனைகள் ஆகியவை பாலின அடிப்படையிலான அவர்களின் நடைமுறைகளின் அடிப்படையில் அமைவதற்கான விதிகளை உருவாக்க மாநில அரசுகள் முயற்சி செய்ய வேண்டும். காவல்துறை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். புதிய

நடைமுறைகளை மீறும் காவல்துறையினர் முறையாக விசாரிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். பாலியல் வல்லுறவு குற்றங்கள் நடந்தால் உடனடியாக செயல்படும் குழுக்களை (காவல்துறை) கிராம மற்றும் நகர்ப்புற அளவில் உருவாக்க வேண்டும்.

**விரைவான, நிச்சயமான நீதி:** பெண்களுக்கும் பாலின சிறுபான்மையினருக்கும் எதிரான வன்முறைகளையும் பாகுபாடுகளையும் வளர்க்கும் வகையில் உள்ள சட்டங்களில் திருத்தம் கொண்டு வருவதற்கு ஆதரவளிக்க வேண்டும்; மதம், சாதி, பாலினம், வயது, பொருளாதார நிலை அல்லது ஊனம் ஆகிய அடிப்படைகளில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நேரடியாக/மறைமுகமாக ஆதரிக்கும் சட்டங்களில் திருத்தம் செய்வதற்கு ஆதரவளிக்க வேண்டும். பிறப்புக்கு முந்தைய கருவின் பாலினம் அறியும் சோதனைகளுக்கு தடை விதிக்கும் சட்டத்தை கறாராக செயல்படுத்த வேண்டும். திருமணமாகிவிட்ட நிலையில் வன்புணர்ச்சிக்கு இலக்கு அளிக்கும் வகையில் உள்ள தற்போதைய சட்டங்களில் திருத்தம் செய்ய ஆதரிக்க வேண்டும். இந்திய தண்டனைச் சட்டம் 377 நீக்கப்படுவதை ஆதரிக்க வேண்டும். எந்த ஒரு நபரின் வன்புணர்ச்சியும் குற்றச் செயல்தான் என்று உறுதிப்படுத்த வேண்டும். 16, 17 வயதுகளில் உள்ள தம்பதியர் ஒத்துப் போகும் நிலையில், வன்புணர்ச்சி தொடர்பான சட்டங்களின்படி தண்டிக்கப்படாமல் இருக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும். ஆயுத படையினர் சிறப்பு அதிகார சட்டத்தின்கீழ் காவல் வன்புணர்ச்சியில் ஈடுபடுவோருக்கு இலக்கு அளிக்கும் பிரிவு மீட்கப்பட வேண்டும். மோதல் பகுதிகளில் பாலியல் குற்றங்களை கண்காணிக்கவும் வழக்கு தொடுக்கவும் தலித் மற்றும் ஆதிவாசி பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும் சிறப்பு ஆணையர்கள் நியமிக்கப்பட வேண்டும். அரசு சார்ந்தவர்களையும் அரசு சாராதவர்களையும் பொறுப்பாக்கும் வகையில் வகுப்புவாத வன்முறைகளுக்கு எதிராக ஒரு வலுவான சட்டம் கொண்டு வருவதற்கு உறுதி ஏற்க வேண்டும். வடகிழக்கு மாநிலங்களிலிருந்து வரும் பெண்களுக்கு எதிரான இனம் சார்ந்த பாகுபாடு மற்றும் வன்முறைகளுக்கு எதிராக வலுவான நடவடிக்கை எடுக்கப்படுவதும், கவுரவக் குற்றங்களை தடுப்பதற்கான ஒரு சிறப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வகுப்புவாத, சாதிய படுகொலை வழக்குகளிலும் அதேபோல் காவல் வன்புணர்ச்சி வழக்குகளிலும் விரைவான நீதி கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும், அவசியம்.

**பொருளாதார வளம்:** பெண்களுக்குப் பாதுகாப்பான, கவுரவமான போதிய வருமானம் அளிக்கக்கூடிய வேலை வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அனைத்துத் துறைகளிலும் சம வேலைக்கு சம ஊதியத்தை உறுதிப்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களுக்கு குழந்தை காப்பகங்கள் மற்றும் இதர முக்கிய ஆதரவுகள் வழங்கப்பட வேண்டும். அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட மற்றும் திரட்டப்படாத பெண் தொழிலாளர்கள் அனைவருக்குமான உரிமைகள், கவுரவம் மற்றும் குறைந்தபட்ச ஊதியம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். முறைப்படுத்தப்படாத கவுரவ ஊதியம் வழங்கப்படுகிற 'தன்னார்வ' திட்டங்களில் பணிபுரியும் ஆஷா மற்றும் அங்கன்வாடி தொழிலாளர்களுக்கு அரசு ஊழியருக்குரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். முறைசாராத் துறை உட்பட பணித் தலங்களில் நிலவும் பல்வேறு நியாயமற்ற பாகுபாடுகளை நீக்குவதற்கு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர நிர்ப்பந்திக்க வேண்டும். பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஆணை செயல்படுத்தப்பட வேண்டும்: பெண்களுக்கு ஒரே சீரான, அவர்கள் பணம் செலுத்தத் தேவையில்லாத, முதியோர் ஓய்வூதியம் கொண்டுவரப்பட வேண்டும்; பெண் குழந்தைகளுக்கு தரமான கல்வி கிடைக்கச் செய்வதற்கான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பிறந்த குடும்பங்களில் சமமான சொத்து உரிமைகளும், திருமணம் மூலம் நியாயமான பங்குகளும் பெண்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் ஒரு திட்டமும் கொண்டுவரப்பட வேண்டும். பொதுக் கழிப்பறைகள், குறிப்பாக வறுமைமிக்க பகுதிகளில், கட்டப்பட வேண்டும்; அனைத்துப் பெண்களுக்கும் தொடர்ச்சியான, பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து வசதி கிடைக்க வேண்டும். பெண்களுக்கு மேம்பாட்டு நீதி உறுதிப்படுத்தப்பட வேண்டும்; வள ஆதாரங்களுக்கான சமூக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அனைத்து செயல் திட்டங்களில் மத்திய நிதி ஆதரவோடு கூடிய உள்கட்டுமானம், பணியாளர் தேர்வு, பயிற்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவை உள்ளடங்கியிருக்க வேண்டும்.

## தலித்துகள்

தலித் மக்களின் நலன்களைப் புறக்கணித்து ஆதிக்க சாதியினர் அதிகாரத்திற்கு உயர்ந்தது என்பதும் அதன் விளைவாக தலித்துகளின் உரிமைகளும் வாய்ப்புகளும் பறிக்கப்பட்டுள்ளன என்பதும் இன்று இந்தியாவில் ஒரு முக்கிய விவாதப் பொருளாகியுள்ளது. திட்டமிட்ட முறையில் அவர்களது நலன்கள் அபகரிக்கப்படுகின்றன. அவர்கள் சமூக மற்றும் பொருளாதார சுரண்டலிலிருந்து எவ்வித பாதுகாப்புமற்றவர்களாக ஒரு அதிகாரமற்ற நிலைக்கு சுருக்கப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியாவில் தலித்துகள்

இப்போதும் மிகவும் சுரண்டப்படுகிற, மிகவும் ஒடுக்கப்படுகிற சமூகமாக இருக்கிறார்கள். இருந்த போதிலும், தலித்துகள் ஒரு போதும் முறியடிக்கப்பட்டுவிடவில்லை அல்லது அவர்கள் ஒரு போதும் தாங்கள் முறியடிக்கப்பட அனுமதித்ததில்லை. அவர்கள் இப்போதும் சாதிய சக்திகளால் எதிர்கொள்ளப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த யதார்த்த நிலைமைக்கு வரலாறு சாட்சியாக இருக்கிறது. இது தலித் அடையாளம் மற்றும் கவுரவத்தின் ஒரு கூட்டு உறுதிப்பாடாக, தலித் சமூகத்தின் அதிகாரம், வலிமை, மீட்சி ஆகியவற்றின் ஒரு கூட்டு உறுதி நிலையாக, இந்தியாவில் தங்களுடைய உரிமைகளுக்காகவும் சட்டப்பூர்வ ஏற்பாடுகளுக்காகவும் முழங்குகிற ஒரே குரலாகவும் இருக்கிறது.

**பொருளாதார சட்ட உரிமைகளுக்கான வாய்ப்பு:** மத்திய – மாநில மட்டங்களில் சீரான முறையில் வடிவமைக்கப்பட்ட அதற்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட நிறுவன அமைப்புகளை உறுதிப்படுத்திடும் சிறப்பு உட்கூறு திட்டம் சட்டமாக்கப்பட வேண்டும். அது பட்டியல் சமூகங்களின் வளர்ச்சித் தேவைகளை உரிய முறையில் கருத்தில் கொண்டதாக அமைச்சகங்கள் / துறைகளுக்கு சிறப்பு உட்கூறு திட்ட நிதிகளை ஒதுக்குவதாக இருக்க வேண்டும். அமைச்சகங்கள் / துறைகள் இவ்வாறாக தலித் சமூகங்களுடன் கலந்தாலோசித்து, ஒரு தனி நிதி நிலை அறிக்கை தலைப்பின் கீழ் பட்டியல் சமூகங்களின் நிலையான மேம்பாட்டுக்கான ஆக்கப்பூர்வமான புதிய திட்டங்களின் தொகுப்பை கொண்டு வர வேண்டும்.

**பாகுபாடே இல்லாத தரமான கல்விக்கான வாய்ப்பு:** யு.ஜி.சி. விதிமுறைகள் 2012 (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவது)–ஐ அமல்படுத்த வேண்டும். சாதி மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறைக் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவர முழுமையான கல்வித் திட்டம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் பொருளாதாரச் சூழலை கருத்தில் கொண்டு தலித் மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்கான முழு கட்டணத்தையும் சிறப்பு உட்கூறு திட்ட நிதியிலிருந்து அளிக்க வேண்டும். மேலும், அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம், மேலாண்மை நிர்வாகக் கல்வி, செவிலியர் கல்வி, விமானம், கப்பல் தொடர்பான கல்வி, சட்டம் உள்ளிட்ட துறைகளில் சேருவதற்கான முழு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

**தனியார் துறை நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்:** தனியார் துறையில் வேலை வாய்ப்பு, சந்தை தனியார் முதலீட்டுச் சந்தை, தனியார் கல்வி மற்றும் குடியிருப்புகள், தனியார் சேவைகள், நுகர்வுப் பொருட்கள் உள்ளிட்ட பல முனைகளில் இடஒதுக்கீடு விரிவுபடுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படும்போது சமமான வாய்ப்புகள் மற்றும் பாகுபாட்டில்லாத நிலை ஆகியவற்றிற்கான சட்டரீதியான பாதுகாப்பை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இவை முறையாக அமல்படுத்தப்படுவதை உறுதி செய்ய அரசு போதிய கண்காணிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**குற்றவியல் நீதி நிர்வாக அமைப்பை வலுப்படுத்த வேண்டும்:** வழக்கு விசாரணை பல ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறபடியால், 2014 மார்ச் 4 அன்று நிறைவேற்றப்பட்ட பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்த அவசரச் சட்டம் 2014ன் நோக்கம் மற்றும் தீவிரத் தன்மையை கணக்கில் எடுத்துக்கொண்டு சிறப்பு நீதிமன்றங்களின் செயல்பாட்டை கண்காணிக்க தேவையான நடைமுறைகளை உருவாக்க வேண்டும். வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1980ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் விரைவான விசாரணைக்காக சிறப்பு ஆய்வு அலுவலர்களையும் சிறப்பு அரசு வழக்கறிஞர்களைக் கொண்ட தனி சிறப்பு நீதிமன்றங்களையும் நியமிக்க வேண்டும். தலித் மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் அவ்வப்போது மீறப்படுகின்றன. எனவே, தலித் மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். முக்கியமாக, பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்த அவசரச் சட்டம் 2014 புதிய அரசால் சட்டமாக்கப்பட வேண்டும்.

**நிலத்திற்கான உரிமை மற்றும் கட்டாய வெளியேற்றங்களுக்கு எதிரான பாதுகாப்பு:** 46 சதவீத தலித் மக்கள் விவசாய தொழிலாளர்களாக கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். 15 சதவீத தலித் மக்கள் பயிரிடுபவர்களாக வேலை செய்கிறார்கள் ஆனால், அவர்களுக்கும் நிலம் இல்லை. எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது 5 முதல் 10 ஏக்கர் நிலம் அளிப்பதற்கான, மத்திய அளவிலான நிதி உதவியோடு கூடிய திட்டத்தை அரசு தொடங்க வேண்டும். இதற்காக, உபரி நிலங்களை நிலம் இல்லாத தலித் தொழிலாளர்களுக்கு தலித் பெண்கள் பெயரில் அல்லது ஆண், பெண் இணைந்த பெயரில் வழங்குவதற்கான சிறப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தலித் குடியிருப்புக்கள் உள்ள இடங்களில் கட்டாய வெளியேற்றங்கள் நடைபெறாததை உறுதிப்படுத்த வேண்டும்.

**போதுமான குடியிருப்புக்கான வாய்ப்பு:** சந்தையிலிருந்து நிலத்தை வாங்கி குடியிருப்பு இல்லாத

கிராமப்புற ஏழைமக்களுக்கு (பெரும்பான்மையானோர் தலித் மக்கள்) முன்னுரிமை மற்றும் அவசர அடிப்படையில் 10 முதல் 15 சென்ட் நிலம் அளிப்பதற்கான மத்திய நிதி உதவியோடு கூடிய திட்டம் தொடங்கப்பட வேண்டும். வீடு இல்லாத நகர்ப்புற தலித் குடும்பங்களுக்கு (மொத்த நகர்ப்புற தொகையில் 12.6 சதவீதம்) 450 முதல் 500 சதுர மீட்டர் அளவில் வீடு, எந்த பாகுபாடும் இல்லாமல் போதிய தண்ணீர், கழிவறை, மின்சாரம், சுகாதார வசதிகள் மற்றும் பிற வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்ய தேவைப்படுபவை ஆகியவற்றோடு வழங்கப்பட வேண்டும்.

## ஆதிவாசி மக்கள்

**மக்களின் எதிர்பார்ப்புகள் எந்த ஒரு அரசுக்கும் முன்னுரிமையாக இருக்க வேண்டும்:** நாடு விடுதலை பெற்று 60 ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்ட பிறகும் கூட இந்தியாவின் மொத்த பழங்குடி மக்கள் எண்ணிக்கையில் 10 சதவீதமாக உள்ள ஆதிவாசி குடும்பங்களில் பெரும்பான்மையோர் தங்கும் இடம், குடும்ப அட்டை, மருத்துவமனை, சாலைகள், போக்குவரத்துகள், பள்ளிகள் ஆகிய அடிப்படை வசதிகளும் வேறு எந்த அடிப்படை உரிமைகளும் சரியான முறையில் சென்றடையாதவர்களாகவே இருக்கிறார்கள். மேம்பாடு அல்லது பாதுகாப்பு என்ற பெயர்களில் இந்த மக்கள் தங்களது தாய் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். 1950 ஜனவரி 26ல் இந்தியா அளித்த வாக்குறுதியை மறு ஆய்வு செய்வதற்கான நேரம் இது. இந்தியா முழுவதும் உள்ள ஆதிவாசி சமூகங்கள், அரசியல் கட்சிகளுக்கும் கொள்கைகளை உருவாக்குகிறவர்களுக்கும் தங்களது தேர்தல் அறிக்கைகளில் சேர்ப்பதற்கும், நாட்டின் குடிமக்களுக்குரிய சமத்துவத்தையும் கவுரவத்தையும் உறுதிப்படுத்திடவும் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள்:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் லட்சக்கணக்கான பழங்குடிகள் மற்றும் வனவாழ் மக்களின் உரிமைகளைப் பொறுத்தவரையில் **பட்டியல் பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய வனவாழ் மக்களின் வனஉரிமைகள் அங்கீகாரச் சட்டம் – 2006 (எஃப்.ஆர்.ஏ.)** மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; இந்தச் சட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுமானால் ஏழைகளிலும் ஏழைகளாக உள்ள 10 கோடிக்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள் பலன் பெறுவார்கள். இந்தச் சட்டம், நில உரிமைகளையும் வனத்தின் மீதான வழக்கமான உரிமைகளையும் அங்கீகரிக்கிறது; மரம் அல்லாத வனப் பொருள்களுக்கான உரிமையை அங்கீகரிக்கிறது; 4 ஹெக்டேர் (10 ஏக்கர்) வரையில் நில உடைமைக்கான உரிமையை அங்கீகரிக்கிறது; சுற்றுச்சூழல் பராமரிப்பு, மேம்பாடு, வன விலங்குகள் பாதுகாப்பு ஆகியவற்றில் வட்டார மக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துகிறது. பல்லுயிர் பாதுகாப்பிலும் வனவாழ் மக்கள் மற்றும் வன வளங்களின் நீடித்த மேம்பாட்டுக்கான சமநிலை திட்டமிடுதலிலும் அவர்களை ஈடுபடுத்துகிறது.

எஃப்.ஆர்.ஏ. 2006 சட்டம் சில மாநிலங்களில் ஓரளவுக்கு செயல்படுத்தப்பட்டிருப்பதையும், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த சில தனி மனிதர்கள் பலனடைந்திருப்பதையும் கடந்த கால அனுபவங்கள் காட்டுகின்றன. எனினும், பழங்குடி மக்களின் பாரம்பரியமும் பண்பாடும் எதுவென்றால் சமூக உடைமையும் சமூக ஆதாயமும்தான். ஆனால், இது நாடு முழுவதும் இந்தச் சட்டம் செயலாக்கப்படுவதில் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது.

சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளபடி சமூக உரிமைகள் செயலாக்கப்படவில்லை. ஆகவே, இனியும் தாமதமின்றி சட்டத்தின் இந்தப் பிரிவு உண்மையான உணர்வோடு மீண்டும் செயலாக்கப்பட வேண்டும். மத்திய – மாநில அதிகாரிகளின் கடமைப் பொறுப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின் விதிகளைச் செயல்படுத்துவதற்கான என ஒவ்வொரு மாவட்டத்திலும் கடமைப் பொறுப்புள்ளவர்களின் செயல்பாடு குறித்து கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். இனி வர இருக்கும் ஆண்டுகளில் அனைத்து ஆதிவாசி பகுதிகளிலும் இது செயலாக்கப்படுவதை, வாழ்வாதாரங்களும் நில உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை, சட்டத்தின் ஆதாயங்களில் அனைத்து பழங்குடி குடும்பங்களும் உட்படுத்தப்படுவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

**கொத்தடிமை வேலை முறை (ஒழிப்பு) சட்டம் – 1976 கறாராகச் செயல்படுத்தப்படுவதன் மூலம் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிக்கப்பட வேண்டும்; கண்காணிப்புக் குழுக்கள் செயல்படச் செய்ய வேண்டும்.** மானிய வசதிகளுடன், பாசன வசதி உள்ள சாகுபடி நிலம் மூன்று ஏக்கர் உள்பட விரிவான மறுவாழ்வு திட்டத்திற்கும், சிறப்பான தடுப்பு நடவடிக்கைகளுக்கும் ஏற்ப சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

இந்திய அரசமைப்பு சாசனத்தின் 23வது சட்ட உரை, பிச்சை எடுத்தல், பாலியல் நோக்கத்திற்காக கடத்தப்படுதல், கொத்தடிமை வேலை முறை ஆகியவற்றுக்கு தடை விதிக்கிறது. இந்தியாவில் சுமார் 4 கோடி பேர் கொத்தடிமைத் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்களில் சுமார் 90 சதவீதம் பேர் எஸ்.சி./எஸ்.டி. மக்களாவர். இந்திய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் – 1976, மேம்பாட்டில் இருந்தும் உரிமைகளில் இருந்தும் விலக்கி வைக்கப்பட்டவர்கள் உள்பட அனைவருக்கும்

சமத்துவம், சுதந்திரம், சமூக நீதி, கவுரவம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது. ஆனால், யதார்த்தத்தில் இந்த அடிப்படை மனித உரிமைகள் மிகவும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களான பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய சமூகங்களாகிய பட்டியல் பழங்குடியினரையும், கிராமப்புற ஏழைகளையும் இதர புலம்பெயர்ந்த மக்களையும் இந்த ஆதாயங்கள் சென்றடையவில்லை. கொத்தடிமை தொழிலாளர் முறை – 1976 குழந்தைத் தொழிலாளர் முறை மற்றும் முறைப்படுத்தல் சட்டம் – 1986 போன்ற சட்டங்கள் உள்ளன என்ற போதிலும், ஏழை மக்களால் இந்த உரிமைகளைப் பெற முடியவில்லை. தொடரும் பாகுபாடுகள், மித மிஞ்சிய வறுமை, அறியாமை ஆகியவை பெரும் எண்ணிக்கையிலான பழங்குடி மக்களையும் கிராமப்புற ஏழைகளையும் தங்களது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து புலம்பெயர்வதற்கும், உயிர்பிழைத்திருப்பதற்காக கொத்தடிமைத் தொழிலாளர்களாக வேலை செய்வதற்கும் தள்ளிவிடுகின்றன.

அடையாளம் காணப்பட்டுள்ள கொத்தடிமைத் தொழிலாளர்களில் 86 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் எஸ்.சி./எஸ்.டி. சமூகங்களிலிருந்து வந்தவர்களே என்று தொழிலாளர் துறை அமைச்சகம் தெரிவிக்கிறது. முறைசாரா தொழில்களில் வேலை செய்யும் இந்த சமூகங்கள் தொடர்ந்து, அதிகார பலமுள்ளவர்களால் ஒடுக்கப்படுகிறார்கள். அதன் விளைவாக தங்களுடைய சுதந்திரத்தையும் கவுரவத்தையும் வாழ்வதற்கான உரிமையையும் இழக்கிறார்கள். இந்த கடுமையான பிரச்சனையை தீர்ப்பதற்கான இயக்கத்தை 30 ஆண்டுகளுக்கு முன் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி பரப்பினார். அதற்காக கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் – 1976 கொண்டு வந்தார். ஆனால், மாநில அரசுகள் இந்தச் சட்டத்தை, வருத்தத்திற்குரிய முறையில், மிகக் குறைவாகவே பயன்படுத்தி உள்ளன. கொத்தடிமைத் தொழிலாளர் முறை என்பதை மாநில அரசுகள் ஒரு தொழிலாளர் பிரச்சனையாக மட்டுமே பார்க்கின்றன. அது ஒரு குற்றம் என்றோ, ஆள் கடத்தல் விவகாரம் என்றோ பார்ப்பதில்லை. இதன் காரணமாக, கொடூரமான மனித உரிமை மீறல் வழக்குகள் மாநில அரசுகளால் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஆகவே, போதிய நிதி நிலை அறிக்கை ஒதுக்கீடுகளுடன் சட்டம் முறையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அது நாட்டிலிருந்து கொத்தடிமைத் தொழிலாளர் முறை முற்றிலுமாக ஒழிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்காக அரசாங்கம் முறையான தடுப்பு ஏற்பாடுகளையும், மீட்பு நடவடிக்கை ஏற்பாடுகளையும் கொண்டுவர வேண்டும். அந்த நடவடிக்கைகள் நீடித்த மறுவாழ்வு திட்டங்களுடன் இணைந்ததாக, இந்த மனித நேயமற்ற கொத்தடிமை முறைக்கு முடிவு கட்டுவதாக இருக்க வேண்டும்.

கொத்தடிமைகளாக உள்ள லட்சக்கணக்கான மக்களை மீட்பதற்கும், கொத்தடிமைகளாக மாறக்கூடிய நிலையில் உள்ள சமூகங்களை பாதுகாப்பதற்கும் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டம் – 1976. சிறந்த முறையில் செயல்படுத்தப்படுவதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும். கொத்தடிமை தொழிலாளர் முறைகள் முற்றிலுமாக ஒழிக்கப்படுவதற்காக மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம் மறுவாழ்வு முயற்சிகள் முடுக்கிவிடப்பட வேண்டும்.

**தேசிய தொடக்க நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை 2013 (இ.சி.சி.இ.) –** ஐ.மு.கூ. அரசின் மற்றொரு முக்கிய கொள்கையாகும். 0–6 வயதுப் பிரிவைச் சேர்ந்த இந்நாட்டின் குழந்தைகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தைக் கட்டுவதற்கான வாய்ப்பையும் ஏராளமான நம்பிக்கையையும் இந்தக் கொள்கை வழங்குகிறது. அனைவரையும் உள்ளடக்கிய, தரமான கல்வி வழங்குவதில் குறிப்பாக கவனம் செலுத்திய ஐ.மு.கூ. அரசின் பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தை நாங்கள் பாராட்டுகிறோம். இந்தியாவின் பழங்குடியினர் பகுதிகளில் தாய்மொழி அடிப்படையிலான பண்மொழி கல்வி (எம்.டி.எம்.எல்.இ.) முறைக்கும் இந்தக் கொள்கை வழிவகுக்கிறது.

இக்கொள்கையைச் செயல்படுத்திட போதிய நிதி ஒதுக்கப்படுவது, இக்கொள்கையைச் செயல்படுத்து–வதற்கான முறையான திட்டங்கள் அமலாக்கப்படுவது ஆகியவற்றை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும். அதன் மூலம் நாட்டு மக்களின் 15.5 சதவீதத்தினர் பலன் பெறுவார்கள். குழந்தைகளின் தொடக்க கட்ட வயதில் தாய்மொழி அடிப்படையிலான பன்மொழிக் கல்வி வளர்க்கப்படுவதை ஒவ்வொரு மாநிலமும் உறுதிப்படுத்திட வேண்டும். அது இளம் பருவத்தில் சிறந்த மாண்புகள், பண்பாடு, மொழி, அடையாளம், சிறந்த அடித்தளம் ஆகியவற்றுக்கான அருமையான சூழலை உருவாக்கும். ஆகவே, அனைத்து அரசுத் துறைகளும், இந்தியாவின் பிரகாசமான சிறந்த எதிர்காலத்திற்காக இளம் குழந்தைகளுக்கான திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும். இந்தியாவின் மிகச் சிறந்த எதிர்காலத்திற்காக இளம் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த அடித்தளத்தை உருவாக்கிடும் வகையில் பழங்குடி சமூகங்களுக்கு தரமான கல்வி, சிறந்த வாழ்வாதாரம் ஆகியவற்றை நாம் வளர்த்திட வேண்டும்.

இந்தக் கொள்கை சட்டமாக்கப்பட்டு செயல்திறனோடு அமலாக்கப்படுமானால் பழங்குடியினர் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் பள்ளிகளிலிருந்து குழந்தைகளின் இடை நிற்றல் என்பது இருக்காது; அதன்மூலம் புலம் பெயர்தல் என்பதும், மாவோயிஸ்ட்டுகளின் தொல்லையும் தடுக்கப்பட முடியும். இவ்வாறாக நாம் நாட்டின் அனைத்துக்

குடிமக்களுக்கும் சம வாய்ப்புடன் அரசமைப்பு சாசன உரிமைகளை எடுத்துச் செல்கிறோம்.

**சிறப்பு உட்கூறு நிதி சட்டங்களுடன் எஸ்.சி./எஸ்.டி. மக்களின் பொருளாதார நீதி பாதுகாப்பு:** எஸ்.சி./எஸ்.டி. சமூகங்களின் சமூக – பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று இந்தியாவின் அரசமைப்பு சாசன 46வது சட்ட உரை கூறுகிறது. நாட்டின் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு கவுரவமான தரமான வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக பொருளாதார உரிமைகளுக்கான சிறப்பு உட்கூறு திட்டம் (எஸ்.சி.பி.) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (டி.எஸ்.பி.) ஆகியவற்றை செயல்படுத்திட போதுமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். எஸ்.சி.பி.–டி.எஸ்.பி. சட்டங்கள் நிறைவேற்றப்படுவது அவசியம். எஸ்.சி./எஸ்.டி. மக்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் போதுமான, தேவையான பட்ஜெட் ஒதுக்கீடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். கல்வி, ஊட்டச்சத்து, நலவாழ்வு, வாழ்வாதாரம், வீட்டுவசதி, குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகள் போன்றவற்றுக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் வேறு எந்த நோக்கத்திற்காகவும் மாற்றப்படாமல் இருப்பதை, ஒருபோதும் அவ்வாறு மாற்றப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்திட வேண்டும். இந்த நடைமுறையை மத்திய அரசு நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்; அதில் சம்பந்தப்பட்ட சமூகங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

**வனவிலங்குகள் சரணாலயங்களும் வெளியேற்றப்படுதலும் – பழங்குடி மக்களின் உரிமைகள்:** ஆதிவாசிகள் தொன்மை வாய்ந்த பூர்வீகக் குடிமக்களாவர். அவர்களுக்கு என, வட்டாரம் சார்ந்த தனித்துவமான அடையாளமும் பண்பாடும் உள்ளன. பூமியோடு அதன் குழந்தைகள் போன்ற ஒரு இணக்கமான ஒருங்கிணைந்த உறவு அவர்களுக்கு உண்டு. அறிவு, சுய ஆளுமை, தேசிய இனம் ஆகிய அமைப்புகளுடன் கூடிய, தங்களுக்குள் கட்டமைக்கப்பட்ட, சமத்துவமான சமூக அடிப்படை உண்டு. இதுதான் ஆதிவாசிகளின் பண்பாடு இந்திய ஆதிவாசிகளின் மதிப்புகளை நாம் புரிந்துகொண்டாக வேண்டும். இன்றைய சூழலில் ஆதிவாசி மக்களின் ஆதிவாசி மக்களின் வாழ்க்கை ஒரு பெரிய கேள்விக்குறியாகி உள்ளது. திட்டமிட்ட வனவிலங்கு சரணாலயங்கள், புலிகளுக்கான காடுகள் போன்றவை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், ஆதிவாசி மக்கள் புலம் பெயர்ந்து தங்களது வாழ்விடத்தை இழந்து கட்டாய வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமைகளுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், இந்தியாவில் மிகவும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சமூகங்களாக மாறியுள்ளனர். அவர்கள் தங்களுடைய இடங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள், அவர்களது வாழ்வாதாரங்கள் சுரண்டப்படுகின்றன, நாடோடியாக திரியும் வாழ்க்கையில் கடுமையான வறுமையில் விழுந்துள்ளனர். ஆகவே, அந்த மக்களையும் உள்ளடக்கிய மேம்பாட்டுத் திட்டங்களை அரசாங்கம் வகுக்க வேண்டும். பழங்குடியினரின் பங்கேற்புடன் இயற்கைப் பாதுகாப்பு திட்டங்களை உருவாக்க வேண்டும். பழங்குடியினரின் வாழ்விடங்களை பாதிக்காத வகையில் அந்தத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அனைத்து வகைகளிலும் அவர்கள் வெளியேற்றப்படுவதை நிறுத்தியாக வேண்டும்.

**மக்கள் சார்ந்த அணுகுமுறையின் அவசியம் (அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 338-A):**

மத்திய – மாநில அரசுகளின் மேம்பாட்டுத் திட்டங்கள், சட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை கண்காணிப்பதற்காகவும் மதிப்பிடுவதற்காகவும், தேசிய பட்டியல் பழங்குடியினர் ஆணையம் (NCST), தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NCHR) ஆகிய அமைப்புகள் மாநில / யூனியன் பிரதேச அரசுகளுடன் ஒரு தொடர்ச்சியான முறையில் கலந்துரையாட வேண்டும். தலைமைச் செயலர்கள் மற்றும் இதர மூத்த அதிகாரிகளுடன், பழங்குடியினர் மேம்பாடு குறித்து இந்த ஆணையங்கள் ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் களங்களுக்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும். பழங்குடி மக்களின் உண்மையான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வேண்டும். மக்கள் கருத்தறிந்து தீர்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக பொருத்தமான முறையில் மக்கள் சார்ந்த அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் சுயேச்சையாக வாழும் நிலையை ஏற்படுத்துவதற்கான மக்கள் சார்ந்த அணுகுமுறைகளை கடைபிடிக்க வேண்டும். நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் – குறிப்பாக அனைத்து பழங்குடியினர் குக்கிராமங்களுக்கும், அரசமைப்பு சாசன உத்தரவாதங்கள் சென்றடைவதற்கான மக்கள் சார்ந்த நடைமுறைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், தகவல் அறியும் திட்டம், கல்வி உரிமைச் சட்டம், வனஉரிமைகள் சட்டம், வன பாதுகாப்புச் சட்டம், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் போன்ற, உரிமைகள் சார்ந்த சட்டங்களையும், அது போன்ற அருமையான சட்டத் தீர்மானங்களையும் நிறைவேற்றுவதன் மூலம் அரசமைப்பு சாசன உத்தரவாதங்களை நாம் உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே, நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் உண்மையான சுதந்திரம், சமத்துவம், நீதி, கவுரவம் ஆகியவற்றை அனுபவித்திடும் வகையில் அமைப்பை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். முறை சார்ந்த திட்டத்துடன் போதுமான நிதி ஆதாரங்களுடன் இந்தச் சட்டங்களை

செயல்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 முறையாக அமல்படுத்தப்பட வேண்டும். பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான (வன்கொடுமை தடுப்பு) திருத்த அவசரச் சட்டம், 2014** உடனடியாக சட்டமாக்கப்பட வேண்டும்.

பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாழ் மக்கள் (வனஉரிமைகளை அங்கீகரிக்கும்) சட்டம் 2006–ஐ முறையாக அமல்படுத்துவதன் மூலம் பாரம்பரிய வன நிலங்கள் மற்றும் சிறு வன மகசூலுக்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் ஆதிவாசி மக்கள் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

கொத்தடிமை முறை ஒழிக்கப்பட வேண்டும் மற்றும் கண்காணிப்பு குழுக்களை செயல்படுத்துவதன் மூலம் கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் 1976 நடைமுறைப்படுத்துவது, தடுப்பது மற்றும் முழுமையான மறுவாழ்வு திட்டத்திற்காகத் தேவைப்படும் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். மூன்று ஏக்கர் பாசன வசதியுடன் கூடிய விளை நிலங்கள் கிடைப்பதற்கு உதவ வேண்டும்.

## மீனவ மக்கள்

**கடலோர முறைப்படுத்துதல் சட்டம் – 2011ஐ வாபஸ் பெற்று, கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிப்பாணை – 1991ஐ அதன் மூல வடிவில் அமல்படுத்த வேண்டும்: கடலோர மேலண்மை அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்:** நமது கடலோர ஒழுங்குமுறை கொள்கையானது கடலோர செயல்பாடுகளை முறைப்படுத்துவதற்கு பதிலாக கடலோர மண்டலங்களில் ஏற்பட்டுள்ள அத்துமீறல்களைச் சட்டபூர்வமாக்கும் நடவடிக்கையாக உள்ளது.

**கடற்கரையில் உள்ள அழிவுப்பூர்வமான மற்றும் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டும். மேலும் இனிமேல் இவற்றிற்கு அனுமதி வழங்கக்கூடாது: கடற்சூழலையும், மீன்வளத்தையும் அழித்து வரும் கடலோர மாசுபாடு இன்று நம்முன் உள்ள மிகப் பெரிய சவாலாகும். அனல்மின் நிலையங்கள், இரசாயனத் தொழில், இறால் தொழிற்சாலைகள், கடற்கால்வாய் ஆகியவற்றின் மூலம் வெளியேறும் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமல் கடலில் நேரடியாக கொட்டப்படுவதால் கடற்சூழல், மீனவ மக்களின் வாழ்வாதாரத்தையே அச்சுறுத்துவதாக உள்ளது. பெரிய தொழிற்திட்டங்கள், நட்சத்திர உணவு விடுதிகள் (ஹோட்டல்), சுற்றுலா தளங்கள், துறைமுகங்கள் மற்றும் எரிசக்தித் திட்டங்களினால் கடல் உயிர்ச்சூழல், கடல் வளங்கள் மற்றும் மீனவ மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவது மற்றும் இவை கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிப்பாணைகளை மீறுவதால் இவற்றிற்கு அனுமதி வழங்கக்கூடாது.**

**இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் மீது நடத்தப்படும் வன்முறைத் தாக்குதல்களுக்கு உடனடி நடவடிக்கை தேவை:** தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு சித்ரவதை செய்யப்படுவது தொடர் கதையாக உள்ளது. மீனவர்கள் பிடிக்கும் மீன்களை அபகரிப்பதும், வலைகளை அறுத்தெறிவதும் நடந்து வருகிறது. மேலும், இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்படும் கொடுமையும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதனை மத்திய, மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான மீன் பிடிக்கும் உரிமையைத் தமிழக அரசும், மத்திய அரசும் பெற்றுத் தர வேண்டும். இந்தியாவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை இந்தியா மற்றும் இலங்கைக்கு பொதுவாக்கப்பட வேண்டும். அது தான் இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வாகும்.

**உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு புறம்பாக செயல்படும் அனைத்து இறால் தொழிற்சாலைகளையும் உடனடியாக தடை செய்ய வேண்டும்:** இறால் தொழிற்சாலைகளுக்கு அதிகமாக நிலத்தடி நீர் தேவைப்படுகின்றது. இறால் பண்ணைகளால் ஏற்படும் சுற்றுப்புற மற்றும் சுகாதார கேடுகள் ஏராளம். இதனால் குடிநீர் உவர் நீராக மாறுகிறது, கடலோரப் பயிர்களை அழிக்கிறது, உச்சநீதிமன்றத்தின் உத்தரவினை மீறி பழவேற்காடு ஏரி பகுதியிலும், கடற்படுகைகள், கழிமுகங்கள் மற்றும் கடற்கழிகளில் தொடர்ந்து செயல்பட்டு வரும் இறால் தொழிற்சாலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

**நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையத் திட்டங்களை உடனடியாக தடை செய்ய வேண்டும்: தமிழகத்தின் பொருளாதாரத்திலும், இந்தியப் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கு வகிப்பது வேளாண்மை துறையும், மீன்துறையுமாகும். இந்த மீன்துறைக்கும், வேளாண்துறைக்கும் முதுகெலும்பாய் இருப்பவர்கள் விவசாயிகளும், மீனவர்களும் தான். இந்த சமூகங்களின் வாழ்வாதாரங்களை அழிக்கும் வகையில், நிலக்கரி, கச்சா எண்ணை, நாப்தா போன்றவைகளை அடிப்படை மூலப்பொருளாக வைத்து மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின் நிலையங்களும்,**

**அவற்றை கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும் வகையில் கட்டப்படும் வணிக ரீதியிலான துறைமுகங்களும் குறிப்பிடத்தக்கவை. இவை விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார உரிமைகளைப் பறிப்பதோடு, அந்த பகுதியைச் சுற்றியுள்ள கடற்கரை வள ஆதாரச் சூழலையும், விவசாய நிலங்களின் உயிர்ச்சூழலையும் அழித்து விடும் அபாயகரமான திட்டங்களாகும்.**

**செய்யூரில் அமையவிருக்கும் 4000 மெகா வாட் திறன் கொண்ட மாபெரும் அனல் மின் திட்டம்:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் செய்யூர் கிராமத்தில் 5000 கோடி முதலீட்டில் நிறுவப்படவிருக்கும் 4000 மெகாவாட் திறன் கொண்ட மாபெரும் அனல் மின் திட்டமானது அந்த பகுதியில் 3200 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ளது. இந்த நிலப்பரப்பில் 60 சதவிகிதம் நீர்பிடிப்பு பகுதியாகும். இந்த நீர்ப்பிடிப்பு பகுதியின் வளங்களை நம்பி 15000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர். இத்திட்டம் நிறுவப்பட்டால் இந்த பகுதியில் வாழும் அனைத்து குடும்பங்களும் வாழ்வாதாரத்தை இழந்து வெளியேற்றப்படும் சூழல் உருவாகும். எனவே இத்திட்டமானது உடனடியாக கைவிடப்பட வேண்டும்.

**கடலோர மணல் குவாரிகள்:** கடலோரப் பகுதியில் அரிய வகை மணல் எடுக்கப்படுவதால், கடலோர உயிர்ச்சூழல் மற்றும் மீனவ மக்களின் வாழ்வாதாரங்கள் முற்றிலும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாக்குமரி மாவட்டங்களில் உள்ள கடலோர கிராமங்களில் சட்டத்திற்கு புறம்பாக அரிய வகை மணல் எடுக்கப்படுவதால் கடலரிப்பு ஏற்பட்டு மீனவ கிராமங்கள் அழிந்து வருகின்றது. இதை தடுத்து நிறுத்துவதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கடலோர பகுதிகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் இயந்திரம் உபயோகித்து மணல் எடுப்பது தடுக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த மணல் மேடுகள் அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

**கடலோர சமூகத்தினரை அவர்களது பாரம்பரிய வாழ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும்:** இன்று, கடலோர சமூகத்தினர் தங்கள் வாழிடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும் அபாயத்தில் உள்ளனர். இந்த மக்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை வேலை சூழலிலிருந்து நீண்ட தூரத்தில் மறுகுடியமர்த்தப்படுகிறார்கள். மீனவ மக்களின் எளிமையான ஆனால், பாதுகாப்பான வீடுகள் அழிக்கப்படுகின்றன. ஆனால், வீடுகள், குடியிருப்புகள் கட்டுவதற்கான ஒப்பந்தம் அரசியல் கட்சி ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால், மக்கள் அவர்களின் நிலம், பாரம்பரிய கடலோர இடங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான உரிமையை இழக்கின்றனர். இத்தகைய உரிமைகள் மீன்பிடிப்பதற்கும் கடலோர ஏழை மக்கள் / மீனவர்களின் வாழ்வாதார உரிமை அழிக்கப்படாமல் இருப்பதற்கு அடிப்படையாகும். இன்றைய நிலையில் கடற்கரை என்பது பன்னாட்டு மற்றும் இந்திய பெரு முதலாளித்துவ திட்டங்கள் கொள்ளையடிப்பதற்கு ஒரு சிறந்த இடமாக அமைந்துள்ளது.

**மீனவப் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் தொழில் சார்ந்த உரிமைப் பிரச்சினைகளுக்கு உடனடியான நடவடிக்கை வேண்டும்:** மீனவர்களுக்கு தனி நல வாரியம் அமைத்த தமிழக அரசு, அந்த நல வாரியத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதில் மீனவப் பெண் தொழிலாளர்களையும் உறுப்பினர்களாக சேர்த்து அவர்களுக்கும் அனைத்து நலத் திட்டங்களும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். **மீன் வியாபாரத்தில் ஈடுபடக்கூடிய மீனவப் பெண்களுக்கு ஏற்படும் விபத்து மற்றும் இறப்பிற்கான நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.** மீனவப் பெண் தொழிலாளர்களை தொழிலாளர்கள் என அங்கீகத்து நலத்திட்டங்களை அமுல்படுத்த வேண்டும். **55 வயதுக்கும் மேற்பட்ட மீனவத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதிய திட்டத்தை அமல்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.**

**சேது சமுத்திரக் கப்பல் கால்வாய் திட்டத்தை முழுமையாக கைவிட வேண்டும்:** பல்வேறு அறிவியல் பூர்வமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட சூழலில், சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். இது மீனவ சமூகத்தின் வளங்களையும் அடிப்படை வாழ்வாதாரங்களையும் அழிப்பதோடு இயற்கை பாதுகாப்பு அரண்களையும் முற்றிலும் அழித்துவிடும். சேது சமுத்திரக் கப்பல் கால்வாய் திட்டத்தை 6வது வழியில் கொண்டு வர வேண்டும் மற்றும் பிரதான சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று கூறுவதை உடனடியாக கைவிட வேண்டும்.

கடலோரங்களில் பெரிய உள்கட்டமைப்பு, சுற்றுலா, தொழில் திட்டங்கள், அணு/அனல் மின் நிலையங்கள் அமைப்பது நிறுத்தப்பட வேண்டும். மீனவ மக்களின் பாரம்பரிய இடம் மற்றும் சுற்றுச்சூழல் மீதான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

## உள்ளாட்சிகள்

அடித்தட்டு ஜனநாயகத்தை வலுப்படுத்த அரசியல் சாசன சட்டம் பகுதி IX மற்றும் IX-Aவில் (விதி 243G மற்றும் W) திருத்தம் கொண்டு வர வேண்டும், ஏழாவது அட்டவணையில் பட்டியல் IV (உள்ளாட்சி அரசாங்கத்திற்கான பட்டியல்) ஒன்றை உருவாக்க வேண்டும்.

**1. மேம்பாடும் மக்கள் அதிகாரமும்:** உள்ளாட்சி அதிகாரம் என்பது மக்களின் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்துக்குத் தேவைப்படுவதாகும். அதிகாரங்களையும் செயல்முறைகளையும் நிதியையும் பரவலாக்குவது என்பது, செல்வமும் அதிகாரமும் வருமானமும் ஒரே இடத்தில் குவிவதைத் தடுப்பதோடும் சமத்துவமற்ற நிலைமைகளுக்கும் தீண்டாமைக் கொடுமைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிரான போராட்டத்தோடும் இணைந்ததாகும், அல்லது அதற்கு முனனோடியானதாகும்.

அதிகமான அதிகாரங்கள் அரசிடம் குவிக்கப்பட்டு, அடக்கு முறைகளும் சுரண்டல்களும் பெருகிக்கொண்டிருக்கும் பின்னணியில் அரசமைப்பு சாசனத்துக்கான 72, 73–வது திருத்தங்கள் மக்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் அடிமட்டத்தில் ஜனநாயகத்தைக் கட்டுவதிலும் சட்டவரம்புகளுக்கு உட்பட்ட ஒரு முக்கிய அஸ்திவாரமாக அமைந்துள்ளன. இவை உண்மை நடப்புகளாக மாறவேண்டுமானால், தொடர்ச்சியான மேம்பாடு, பங்கேற்பு ஜனநாயகம் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவையாகும், வேறுபடுத்த முடியாதவையாகும். அடிமட்டத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்துவது, கூட்டாட்சி என்பதை மறுவரையறை செய்வது ஆகியவை அதிகாரங்களைப் பரவலாக்குவதாக மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கத்தையும் ஏழை மக்களின் இதர பிரிவினரையும் அணிதிரட்டி அதிகாரம் வழங்குவதாகவும் இருக்க வேண்டும். இது அரசமைப்பு சாசனத்தின் ஒரு முக்கியமான இலக்காகும்; உயர்ந்த தன்னாளுமை, சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை நோக்கிய பயணத்தோடு இணைந்ததாகும். தற்சார்பு மற்றும் உயர் தன்னாளுமை உரிமை என்ற இலக்கை அடைவதற்காக, மக்கள் தங்கள் சமூக அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும், தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், சுரண்டலுக்கு எதிராகப் போராடவும், சமத்துவமற்ற அடக்குமுறை சார்ந்த அதிகார உறவுகளுக்கு எதிராகப் போராடவும், மனித உரிமைகளை மேம்படுத்தவும், சமூக உடைமைகளைப் பாதுகாக்கவும் பஞ்சாயத்துகள், நகராட்சிகள் ஆகியவை புதிய திட்டத்தின் கீழ் மிக முக்கியமான அமைப்புகளாகியுள்ளன.

**பெண்கள், தலித் மற்றும் ஆதிவாசிகளுக்கான இடஒதுக்கீடு: இந்திய அரசு 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தங்களில் அதிகாரப்பரவலாக்கம் என்ற கண்ணோட்டத்தை அளித்திருக்கின்றது. இதில் முக்கியமாக பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு தலித்துகள் மற்றும் பழங்குடி இன மக்களுக்கும் ஒதுக்கீடு போன்றவை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டில் உற்சாகமளிக்கக்கூடிய விஷயம் என்னவென்றால் 33% ஒதுக்கீடு பெண்களுக்கு செய்திருந்தாலும் 38% பெண்கள் உள்ளாட்சித் தேர்தல்களிலே வெற்றிபெற்றுள்ளார்கள். ஆனால் இவ்விஷயம் உண்மையிலேயே பெண்களை அதிகாரமுள்ளவர்களாக்கவில்லை. குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள தலித்துகளும், பழங்குடியின மக்களும் சமவாய்ப்புகள் பெறவில்லை. பெண்களும், தலித்துகளும் நிறைய சவால்களை அன்றாடம் சந்திக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. அதிகாரத்தினால் அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். நிறைய தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் அவர்களின் கணவர் பின்னாலோ அல்லது அவர்கள் குடும்பத்தினரின் ஆண்கள் பின்னாலோதான் நிர்வாகம் செய்கின்றார்கள். ஆண்கள் இச்சூழல்களில் நிர்வாகத்தை கையில் எடுத்துள்ளனர். பெண் தலைவர்கள் மீது பலசமயங்களில் கொடூரமான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது. பஞ்சாயத்துகளின் ஆய்வாளர்கள் (மாவட்ட ஆட்சியர்) நூற்றுக்கணக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை பதவிநீக்கம் செய்துள்ளார்கள். இருந்தாலும் நூற்றுக்கணக்கான பெண்கள், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் சுதந்திரமாக செயல்பட கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆண் பஞ்சாயத்து உறுப்பினர்களின் (சாதி, அரசியல்) கோரிக்கைகளை, வழிநடத்துதல்களை ஏற்காத பெண் பஞ்சாயத்து தலைவர்கள் பல சவால்களை சந்திக்க நேரிடுகிறது.**

**29 துறைகளுக்கான அதிகாரங்கள் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும்:** மாநில அரசுகள் ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய 29 துறைகளுக்கான அதிகாரம் மற்றும் பொறுப்புகளில் பாதிக்கு மேல் சுற்றுச்சூழல் நிர்வாகம், வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு சார்ந்தவையாகும். இருப்பினும் இன்றுவரை மாநில அரசுகள், அதிலும் முக்கியமாக தமிழ்நாடு அரசு, அவர்களிடமுள்ள அதிகாரங்களை ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கவில்லை. **29 துறைகளில் உள்ள இனங்களின் கீழ் முறையே வறுமை ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், சமூக நலம் (ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் நலம் உள்ளிட்டு) நலிவடைந்த பிரிவினர் நலம் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றில் ஊராட்சிகள் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்காக திட்டங்கள் தயாரிக்கவும் அவற்றை செயல்படுத்தவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.**

**தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் இந்திய அரசியல் சாசனச் சட்டம் ஆகியவற்றில் சட்டமாற்றம்**

**கொண்டு வந்து கிராமசபையின் அதிகாரங்களைப் பலப்படுத்த வேண்டும்:** இந்திய அரசியல் சாசனச் சட்டத்தில் 243A பிரிவின்படி, கிராமசபையானது கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் பதிவு பெற்றிருக்கும் நபர்களைக் கொண்ட அமைப்பாகும். மாநிலத்தில் சட்டமன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் செயல்படுவது போல், கிராமசபையும் கிராம அளவில் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்தலாம் (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1974–ன் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகள்).

ஆயினும், இன்று வரையில், பெரும்பாலான இடங்களில் அது மாவட்ட நிர்வாகம் கூறுகிற விஷயங்களை கேட்டுக்கொள்கிற அமைப்பாக மட்டுமே இருக்கிறது. அதற்கு மேல் தனது எல்லையை அதனால் விரிவுபடுத்திக்கொள்ள முடியவில்லை. கிராமத்தின் உண்மையான வாழ்வாதார நிலைமைகளை ஆராயக்கூடியதாக, அதற்கேற்ப தனது அதிகாரங்களை செயல்படுத்தக்கூடியதாக இல்லை. பெண்கள், பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் கிராமத்தின் பரம ஏழைகள் உள்ளிட்ட வாக்காளர்கள் அனைவரும் பங்கேற்பதற்கு உரிமை உள்ள தங்களது சொந்த நலன் தொடர்பான பிரச்சனைகளை எழுப்பக்கூடிய ஒட்டுமொத்தத்தில் கிராமத்தை பாதிக்கக்கூடிய பிரச்சனைகள் குறித்து பேசக்கூடிய ஒரே அமைப்பு கிராம சபைதான். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கிராம சபை உறுப்பினர்கள் இன்னும் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. முடிவுகள் எடுக்கும் நடைமுறையில் முழுமையாக பங்கேற்க வேண்டியிருக்கிறது.

ஒரு கிராமத்தில் ஏதேனும் தொழிற்சாலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தால் கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. ஆனால், நடைமுறையில் அப்படி நடப்பதில்லை. சில நேரங்களில், பாதிக்கப்படுபவர்களுக்கு போராட்டத்தில் ஈடுபடுபவதன்றி வேறு வழி இருப்பதில்லை. சுற்றுச்சூழல் ஆளுமை, நிலம் மற்றும் இயற்கை வள நிர்வாகம் ஆகவேதான் முக்கிய பிரச்சனைகளாக உள்ளன. இவை குறித்து சமூகம் தெரிந்து வைத்திருந்தால்தான், தன்னை அதில் ஈடுபடுத்திக்கொண்டால்தான் உள்ளூர் மக்களால் மிகவும் உறுதியான முறைகளில் இயற்கை வளங்களை நிர்வகிக்க முடியும். எங்கெல்லாம் உள்ளூர் மக்கள் தங்களது உரிமைகளுக்காக எழுகிறார்களோ தங்களது வாழ்வாதாரப் பிரச்சனைகளை எடுத்துக்கொள்கிறார்களோ, தங்களை பாதிக்கக்கூடிய முடிவுகள் குறித்து கேள்வி எழுப்புகிறார்களோ அங்கெல்லாம் பஞ்சாயத்து ஆட்சி முறை செயல்படுகிறது. மக்கள் தங்களது சுயச்சார்புடன் கூடிய மேம்பாட்டைத் திட்டமிடுவதற்காக அவர்களை திரட்டுவதற்கான ஆற்றல் மிக்க வேர்மட்டத்திலான அமைப்பாக, நாசகரமான மேம்பாட்டுத் திட்டங்களை நிறுத்தும் முடிவுகளை எடுக்கக்கூடிய அமைப்பாக இருப்பது கிராம சபையே ஆகும். **கிராம சபைகளுக்கு அதிகாரம் கொடுப்பதற்கு அரசியல் சாசன திருத்தங்கள் கொண்டுவரவேண்டும். கிராம சபைகள் அதிகாரங்கள் கொண்டதாக முடிவெடுக்கக்கூடிய அமைப்பாக, மாவட்ட ஆட்சியரின் தலையீடு இல்லாத அமைப்பாக மாற வேண்டும். கிராம சபைகள் நாடாளுமன்றம் போல செயல்பட வேண்டும்.**

**அரசமைப்பு சாசன திருத்தத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டிய அவசியம்:** மாநில பட்டியலிலும், மத்தியப் பட்டியலிலும், பொதுப் பட்டியலிலும் பட்டியல் I, II, III ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பது போல, உள்ளூர் அரசாங்கத்திற்கு இணையான பட்டியல் IV-உடன் இணைந்த அரசமைப்பு சாசனம் சார்ந்த திட்டத்தை வலியுறுத்துவதற்கான கட்டாயம் எதுவும் இல்லை. இது தெளிவாகக் குறிப்பிடப்படாததால், பல்வேறு மாநில அரசுகள் ஆளும் அரசு தேவையானது என்றும் பாதுகாப்பானது என்றும் கருதுகிற அளவிற்கு மட்டுமே அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கு இட்டுச் சென்றுள்ளது. அரசமைப்பு சாசனத்தின் 73வது திருத்தத்தில் உள்ள உணர்வுகளுக்கு ஏற்ப உள்ளூர் சுய நிர்வாகம், வேர்மட்ட ஜனநாயகத்தில் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை வலுப்படுத்துவதற்கு ஏற்ப பஞ்சாயத்து அரசாங்க அமைப்பை முற்போக்கான முறையில் மறு கட்டமைப்பு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

உள்ளாட்சித் தலைவர்கள் இனியும் மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் செயலாக்க ஏஜென்டுகளாக இருக்க முடியாது. அவர்கள் இனிமேலும் அதிகார வர்க்கத்தினருக்கு தொண்டு செய்கிறவர்களாக இருக்கக்கூடாது. சட்டப்பிரிவு 243G, W, பாகம் IX, IX-A திருத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். ஏழாவது அட்டவணையில் (உள்ளாட்சி அரசாங்க பட்டியல்) பட்டியல் IV உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோருகிறார்கள். இதற்காகக் குரல் கொடுக்க அனைத்து அரசியல் கட்சிகளும் உறுதியளிக்க வேண்டும்.

**உள்ளாட்சி அரசாங்கத்தில் அரசு அதிகாரத்தின் தலையீடு:** மாவட்ட ஆட்சியரின் எல்லையற்ற அதிகாரங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும். ஊராட்சித் தலைவர்களை தன்னிச்சையாக பதவி நீக்கம் செய்யும் மாவட்ட ஆட்சியரின் தனிப்பட்ட அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும். ஊராட்சித் திட்டங்களின் மீது அரசு அதிகாரிகளின் தலையீட்டை குறைக்க வேண்டும், அரசு அதிகாரிகள் ஊராட்சிகளுக்குப் பொறுப்புடையவர்களாக

இருக்க வேண்டும். குறிப்பாக, ஊராட்சியின் முடிவுகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

**நிதி, பணிகள், பணியாளர்களை அளிப்பது:** இந்திய அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஊராட்சிகள் தேர்ந்த அரசியல் நிர்வாக அமைப்பாக செயல்பட, தன்னாட்சி அரசாங்கத்தின் உள்ளூர் நிறுவனங்களாக அவர்களின் கடமைகள் மற்றும் பணிகளை செய்வதற்கு ஏற்ற வகையில் உள்ளாட்சிகளுக்குக் கூடுதலான நிதி, பணிகள், பணியாளர்கள் வழங்கப்பட வேண்டும். மாநில அரசின் நிதியிலிருந்து ஐம்பது சதவீதம் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**ஊராட்சிகளுக்கு நீதிமன்ற அதிகாரங்கள்:** உள்ளாட்சி அரசாங்கத்தில் தலித், ஆதிவாசி மற்றும் பெண்கள் அரசியல் பங்கேற்பைத் தடுக்கும் வகையிலான குற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிற குற்றங்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நீதிமன்ற அதிகாரங்கள் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் வகையில் உள்ளாட்சிகள் சட்டம் திருத்தப்பட வேண்டும். உள்ளாட்சி அரசாங்க நிர்வாக அமைப்பிற்குள்ளேயே நீதிமன்ற அமைப்பு முறை சுதந்திரமாக செயல்படும் வகையில் முறையான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

**பெண்கள், தலித் மற்றும் ஆதிவாசிப் பிரதிநிதிகளின் சுதந்திரமான செயல்பாட்டை உறுதிப்படுத்துவது:** உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் அனைத்து பயிற்சிகளிலும் தலித், ஆதிவாசி மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடு உள்ளிட்ட பிற உரிமை மீறல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளோடு பாலின மற்றும் சாதி குறித்த விழிப்புணர்வுப் பயிற்சிகள் உள்ளடக்கப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகள் உள்ளாட்சி நிர்வாகத்தில் பொறுப்புடைத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் வளர்ச்சி கலாச்சாரத்தை மேம்படுத்துவதில் குறிப்பிட்ட கவனம் செலுத்த வேண்டும். அனைத்து மாநிலங்களும் ஒரே மாதிரியாக மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கு ஐம்பது சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும்.

*சுயேச்சை வேட்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் கவனத்திற்கு இந்த மாற்று அரசியல் திட்டத்தை முன் வைக்கிறோம்.*

**Ossie Fernandes**
*Coordinator, Coalition*

**S.Thomas Jayaraj**
*Former Convenor,CACL*

**V.Indira**
*CoConvenor, TNCRPN*

**K.Murthy**
*Convenor, RTE Forum - TN*

**Dr. K. Krishnan**
*Executive Director*

**Jesurethinam**
*Convenor, CAN*

**A. Gandhimathi**
*Advisor, TNWFWF*

**P. Joseph Victor raj**
*Convenor, CACL*

**R.Murugappan**
*Coordinator, NCSPA*

**K.Krishnaveni**
*Advisor, TNFWPPG*

***Organised by:***

## Coalition of Civil Society Organisations – TamilNadu and Puducherry

*C/o No.54, LDG Road, Little Mount, Saidapet, Chennai – 600 015, Ph: 22353503, Mob: 98410 53936*

***Campaign Against Child Labour***
***Coastal Action Network***
***Campaign for Custodial Justice and Abolition of Torture***
***National Adivasi Solidarity Network***
***Tamil Nadu Child Rights Protection Network***
***National Coalition for strengthening SC/ST (PoA) Act 1989***
***RTE Forum***
***Tamil Nadu Federation of Women Presidents of Panchayat Government***
***Women's Advocacy and Protection Forum***
***Campaign Against Sex Selective Abortion***
***Tamil Nadu Women Fish Workers Federation***

# தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் ஊராட்சித் தலைவரின் உண்மைக் கதை

**அகிலா**
**ஒவரூர் ஊராட்சி,**
**முத்துபேட்டை ஒன்றியம் திருவாரூர் மாவட்டம்**

வார்டு உறுப்பினர்களாலும், ஊராட்சி செயலராலும், மிகவும் பாதிக்கப்பட்டு வருத்தத்தில் இருக்கும் இவர். மக்களை பாதிக்கும் பிரச்சனைகளை அகற்றி நிம்மதியாக ஒவரூர் ஊராட்சி மக்கள் வாழ்வதற்காக போராடி வருபவர்தான் ஊராட்சித் தலைவர் அகிலா.

இவர் 2006ம் ஆண்டு ஊராட்சித் தேர்தலில் போட்டியிட்டு 3 ஓட்டு வித்தியாசத்தில் தோல்வி அடைந்துள்ளனர். மீண்டும் 2011ஆம் ஆண்டு ஊராட்சி தேர்தலில், போட்டியிட்டு, வெற்றி பெற்றுள்ளார். இதன்பிறகு இவர் சந்தித்த பிரச்சனை அளவிட முடியாத அளவுக்கு சென்றுள்ளது. அகிலா ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் இன மக்களே அகிலாவிற்கு எதிராக செயல்பட்டு இவரை பணி செய்வதில் தடை ஏற்படுத்தி கொண்டுள்ளனர். வார்டு உறுப்பினர்கள் ஒத்துழைப்பும் கிடையாது. ஊராட்சியில் நடக்கும் கிராம சபை கூட்டத்திலும் சரிவர கூட்டம் நடத்த முடியாமல், வார்டு உறுப்பினர்கள் பிரச்சனை செய்வார்கள் இல்லை என்றால் வருவதில்லை.

குளங்கள் ஆக்கிரமித்து வாழை தோட்டம் போட்டுள்ளனர். இந்த ஆக்கிரமிப்பை அகற்றி உள்ளார். இதனால் ஆக்கிரமிப்பாளர்கள் அகிலாவை சென்று வரும் இடங்களில் எல்லாம் திட்டுவதும் கேவலமாக பேசுவதுமாக இருப்பார்கள். அகிலா எந்த ஒரு செயலுக்கு செல்லும்போது தன் கணவரை அழைத்துக்கொண்டு துணையுடன் சென்று வருகிறார். அகிலா, ஊராட்சி தலைவருக்கு போட்டியிட்டதற்கு இவருடைய மாமனார் (கணவரின் அப்பா) சமூக சேவையில் ஆர்வம் உள்ளவராக இருப்பதால் பொது பிரச்சனையில் தானே முன் நின்று எப்படிப்பட்ட பிரச்சனை இருந்தாலும் தீர்த்து வைத்து அவர்களுக்கு உதவியும் செய்து வந்ததால் அகிலாவிற்கு மக்கள் செல்வாக்கு கிடைக்க பெற்ற அகிலா கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்து இருப்பதால், ஆதிக்க வர்க்கத்திற்கும் வார்டு உறுப்பினருக்கும் பிடிக்காமல் இருந்து வருகிறது.

அத்துடன் ஊராட்சி செயலர் ஒத்துழைப்பும் கிடைக்காமல் தடுமாற்றத்துடன் செயல்பட்டு கொண்டுள்ளார். இதனால், மாவட்ட ஆட்சியர் BDOவிடம் புகார் செய்து ஊராட்சி செயலரை மாற்றி கடந்த இரண்டு மாதமே ஆகி உள்ள நிலையில் மக்கள் எதிர்பார்ப்பு இவரிடம் அதிகமாகி உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஒவரூர் ஊராட்சியில் இரண்டு கிராமம். ஒன்று ஒவரூர், மற்றொன்று வெள்ளங்காடு, இந்த இரண்டு கிராமம், மிக பெரியது ஆகும். இங்கு மழை பொழிந்தால், மழைநீர் தேங்கி எல்லா வீட்டிற்கும் புகுந்து விடும். இதனால், மக்கள் வசிக்க முடியாது. பிள்ளைகளும் பள்ளிக்கு செல்ல முடியாமல் வீட்டிலே இருக்க வேண்டியுள்ளது.

இதற்காக இந்த ஊராட்சியை மேம்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஒரு தடுப்பு சுவரும் பாலமும் கட்டிவிட்டால் தண்ணீர் தேங்குவது குறையும், மக்கள் மழை நேரத்தில் யாராவது உறவினர் வீடு பார்த்து தங்குவதும் தனியாக வீடு பார்ப்பதும் இல்லாமல் தம் கிராமத்தில் நிம்மதியாக தங்குவதற்கு வழி பிறக்கும் என்பதற்காக, எம்.எல்.ஏ., பி.டி.ஓ. மாவட்ட ஆட்சியர் ஒன்றிய சேர்மேன் அனைவரிடமும் புகார் மனு கொடுத்து, பாலம் கட்டுவதற்காக நிதியும் கேட்டுள்ளார். மூன்று முறை பாலம் கட்டுவதற்கும், தடுப்பு சுவர் கட்டுவதற்கும் அரசு ஆணை பிறப்பித்து ரத்து செய்துள்ளனர். இதனால் மக்கள் மிகவும் வேதனையில் உள்ளதாகவும் மழை நாள் வந்தால் என்ன செய்வது, பிள்ளைகளை எல்லாம் எங்கு அனுப்புவது என்று ஊராட்சி தலைவர் அகிலாவை கேட்டு நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர்.

இதற்காக சிறப்பு கிராம சபா கூட்டி மக்களிடம் ஊராட்சி செயல்களின் நிலைமையையும் சொல்லி. அத்துடன் இதற்காக ஒரு தீர்மானமும் போட்டு மக்களிடம் கையொப்பம் வாங்கி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி இதற்கான பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். அது மட்டும் அல்லாமல் இந்த கிராமத்தில் பேருந்து வசதியும் இல்லாததால் (மூன்று கி.மீ. நடந்து சென்றுதான் பேருந்து பிடிக்கணும்) குழந்தைகள் பள்ளிக்கு செல்வது, வீட்டுக்கு வேண்டிய அத்யவசியப் பொருட்கள் வாங்குவது, பணிக்கு செல்வது போன்றவையும் ஆபத்து நேரத்தில் மருத்துவ வசதி பெறுவதும் மிகவும் கடுமையாக இருப்பதால் இதற்காக சாலை வசதி ஏற்படுத்தி பேருந்து செல்வதற்கான செயலில் போராடி வரும் இவருக்கு இன்னொரு பக்கம் எதிர்ப்பை சந்தித்து வருகிறார். ஆக்கிரமிப்பு அகற்றுவதிலும், தலித் பெண்ணாக இருப்பதாலும் ஊருக்கு மழை நேரத்தில் தண்ணீர் தேங்கி குடியிருப்பு முழுவதாலும், குடிநீர் பற்றாக்குறையாலும் முதியோர் உதவி தொகை ஒரு சில நபர்களுக்கு நிறுத்தப்பட்டதாலும் பல இன்னல்களை எதிர்கொள்ளும் இவர் சுதந்திரமாக செயல்பட முடியாத சூழ்நிலையிலும் அகிலா செயல்படுத்தியது. குடிநீர் வசதி ஓர் அளவு பண்ணை குட்டைத் திட்டம் மூலம் 6 குளமும் வெட்டி ரோடு வசதி 100 நாள் பணிகள் மூலம் குளங்கள், ஏரிகள் தூர் வாரியது.

60,000, 30,000 தண்ணீர் நீர் தேக்க தொட்டி கட்டியது போன்றவையும் செய்துள்ளார். இதற்கு மேல் ஊராட்சி

பகுதியில் பணி செய்யணும் என்றால் நிதி பற்றாக்குறை உள்ளது என்றும் இந்த ஊராட்சி அதிக வருமானம் இல்லாத ஊராட்சியாக இருப்பதாலும், வரி வசூலும் கிடைப்பதில் சிரமமாக இருப்பதாலும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது கடுமையாக உள்ளது. குளங்களில் மீன் வளர்ப்பு மூலம் குத்தகைக்குவிட்டால் 3500 மட்டுமே கிடைக்கிறது என்கிறார்.

இந்த ஒவரூர் ஊராட்சியில் இரண்டு கிராமம் உள்ளது. மக்கள் தொகை 2742. வாக்குரிமை பெற்றவர்கள் 1640 நபர்கள். இதில் அகிலா எடுத்த வாக்கு 709யில் 350 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்டவர்கள் 5 நபர்கள், வெள்ளையம்மாள், தமயந்தி, லலிதா, விஜயலஷ்மி, இந்திரா காந்தி ஆகும். இவர்கள் பொது பெண் இடஒதுக்கீடு முறையில் தேர்தலில் போட்டியிட்டனர். இந்த இடஒதுக்கீடு முறையில் தேர்தலில் போட்டியிட்டனர். இந்த ஊராட்சியில் 3 ஆரம்பப் பள்ளிகளே உள்ளன. 150 மாணவர்கள் படிக்கின்றனர். மற்ற மாணவர்கள் 4 கி.மீ. சென்றுதான் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி செல்ல வேண்டியதாக உள்ளது. அம்மைப்பூர் ஏரி 1, பால்வாடி 3, சுகாதார வளாகம் 1, மகளிர் குழு 30, 25திலிருந்து 15 நபர்கள் இடம் பெற்றுள்ளனர். தாய் திட்டம் மூலம் பசுமை வீடு, 34 வந்ததில் ஆதிதிராவிடர் மற்றும் இதர வகுப்பினருக்கு பிரத்து கொடுக்கப் பெற்றுள்ளது. ஆடு 54 நபர்களுக்கும் மின் மாற்றி 2ம் தாய் திட்டம் மூலம் சாலை வசதி தண்ணீர் வசதி பள்ளிக்கு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்துதரப்பட்டுள்ளது. பொது விநியோக அட்டை 850 நபர்களுக்கு, 100 நாள் வேலை மூலம் 850 நபர்களுக்கும் கொடுக்கப் பெற்றுள்ளது மற்றும் இந்த வார்டு உறுப்பினர்கள் 9 நபர்கள் உள்ளன.

பாலசுப்பிரமணியன் 2 குமாரி துணைத் தலைவர், சுந்தரம்மாள், வளர்மதி 5 விஜயா, துரை 6 அன்னலஷ்மி 7, குமார் 8, மணிமாறன் 9, மணிமாறன் ஊராட்சி செயலர் கணேசன் இவர் வந்து 4 மாதம் ஆகிறது. இதில் 5 வார்டு உறுப்பினர்கள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர் இவர்களும் ஒன்றிய கவுன்சிலர் ஜெகன்நாதனும் ஊராட்சி தலைவிக்கு ஒத்துழைப்பு கொடுக்காத காரணத்தால் ஊராட்சிக்கு செய்யும் செயல்பாடுகளில் நிறைவு செய்வது இந்த தலைவிக்கு போராட்டமாக உள்ளது. கிராமத்தில் வசிக்கும் சாதியினர் அகமுடையார், வன்னியர், நாடார், ஆதிதிராவிடர், குறவர்கள், பிராமின், கோனார் ஆகும். முக்கிய தொழில் விவசாயம், விவசாய கூலி கட்டிட வேலை, படித்தவர்கள் 30 சதவீதம் உள்ள கிராமமாக திகழ்கிறது. அகிலாவிற்கு வயது 37. படிப்பு பி.ஏ., சொந்த வீடு 3 ஏக்கர் நிலம் கூட்டு குடும்பம் கணவர் முருகேசன். மின்சார பொறியாளர் டிப்ளமா கோர்ஸ் படித்தவர். வயது 44. முருகேசும் மக்கள் தொண்டு செய்வதில் ஆர்வம் உள்ளபவராக உள்ளார்.

**– பெண்களுக்கான சட்டசேவை மையம் &**
**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

# ஊராட்சிகளுக்கு நிதி வழங்கும் நடைமுறையில் மாற்றம்

**சி.எம்.டி.ஏ., திடீர் மாற்றம்:** சென்னை புறநகரில் உள்ள ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி உதவி வழங்கும் நடைமுறையை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (சி.எம்.டி.ஏ.,) துவக்கி உள்ளது. சென்னை புறநகரில், ஏழு நகராட்சிகள், 12 பேரூராட்சிகள், 189 ஊராட்சிகள் சி.எம்.டி.ஏ.,வுக்கு உட்பட்ட பகுதிகளாக உள்ளன.

**நடைமுறை :**அங்கு புதிய கட்டுமான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும்போது பெறப்படும் வளர்ச்சி கட்டணம், உள்ளாட்சி அமைப்புகளால் வளர்ச்சி திட்டங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும். அவ்வாறு பெறப்படும் நிதியை கொண்டு, உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளலாம். அதற்காக, உள்ளாட்சிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தை சி.எம்.டி.ஏ., செயல்படுத்தி வருகிறது. தற்போதைய நிலவரப்படி, சி.எம்.டி.ஏ.,வுக்கு உட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் நேரடியாகவும், ஊராட்சிகளுக்கு அந்தந்த பகுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் வாயிலாகவும் இந்த நிதி வழங்கப்படுகிறது. சாலை, தெருவிளக்கு, மயானங்கள் சீரமைப்பு, குடிநீர் வாகனங்கள், கழிவு நீர் வாகனங்கள் வாங்கவும் இத்திட்டத்தில் நிதி வழங்கப்படுகிறது.

**மாற்றம்:** அதில், திட்டத்துக்கான மொத்த மதிப்பில், 90 சதவீதத்தை சி.எம்.டி.ஏ., வழங்கும். எஞ்சிய 10 சதவீதத்தை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் அளிக்க வேண்டும். ஆண்டுக்கு, 2 கோடி ரூபாய் வரை அந்த திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான நடைமுறைகள் மாற்றப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

**இதுகுறித்து சி.எம்.டி.ஏ., உயரதிகாரி ஒருவர் கூறியதாவது:** திட்டப் பணிகளில் ஏற்படும் முன்னேற்றத்தின் அடிப்படையில் மூன்று முதல் நான்கு தவணைகளாக அந்த நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படுகிறது. இதில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு நிதி வழங்கும் தவணை முறை அண்மையில் மாற்றப்பட்டது. இதை அடுத்து, ஊராட்சிகளுக்கு நிதி வழங்கும் தவணை முறையும் மாற்றி அமைக்கப்பட உள்ளது. இதன்படி, முதல் தவணையாக வழங்கப்படும் நிதிக்கான பணியில், 75 சதவீத பணிகள் முடிந்தால் மட்டுமே அடுத்த தவணை தொகை கிடைக்கும் என்ற அடிப்படையில் புதிய நடைமுறைகள் அமல்படுத்தப்பட உள்ளன. இதற்கான பரிந்துரைகளுக்கு அண்மையில் நடந்த குழும கூட்டத்தில் ஒப்புதலும் பெறப்பட்டு விட்டது.

**– ஆதாரம்: தினமலர், 28.2.2014**

# தில்லியில் ஊராட்சிகளின் விசித்திர நிலை

**சிவில் லைன்ஸ் / ரிச்சர்டு மஹாபத்ரா**

*நகர சுயாட்சி சட்ட முன்வரைவு தலைநகர மாநிலத்தில் அதிகாரங்களைப் பரவலாக்க வழிவகுக்கும்; ஆனால், கிராம ஊராட்சிகளின் கதி என்ன?*

தில்லிக்கு சுயாட்சி வந்துவிட்டது. தில்லி நகர சுயாட்சி சட்டமுன்வரைவு தில்லி அரசாங்கத்தால் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது சுயாட்சிக்கான அதிகாரத்தை மக்களுக்கு வழங்குகிறது. வார்டு கவுன்சிலர் பிரதிநிதித்துவ முறைக்கு மாறாக, உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டம் பொதுவாக கிராம பஞ்சாயத்துகளில் பின்பற்றப்படும் கிராம மன்றம் அல்லது கிராம சபை எனப்படும் ஒரு பங்கேற்பு முறையை கொண்டு வருகிறது. சட்டத்தின் பெயரிலேயே குறிப்பிடப்பட்டிருப்பது போல் அது நகரப் பகுதிகளுக்கு உரியதாகும். தில்லிவாசிகள் இதில் குறை இருப்பதாக கருதமாட்டார். ஏனென்றால் தில்லி ஒரு நகரம் என்று கருதப்படுகிறது. ஆனால், இங்கே தான், மாண்டு போன ஒரு கதை மீண்டும் உயிர் பெற்று வருகிறது.

மத்திய பிரதேச மாநிலத்தில் முன்னாள் உயர் அதிகாரி ஒருவர்தான் இந்த சுயாட்சி சட்டமுன்வரைவை தயாரித்துள்ளார். மத்திய பிரதேச மாநிலத்தின் பஞ்சாயத்துராஜ்சட்டம் – 2001 உருவாக காரணமாக இருந்தவர் இவர். நாட்டிலேயே, பிரதிநிதியை திரும்ப அழைக்கும் உரிமையை வழங்குகிற சட்டம் அது. மத்திய பிரதேச மாநில சட்டத்தில் 'சுயாட்சி' என்ற சொல் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்த புதிய நடைமுறையின்படி, ஒரு வட்டத்தில் உள்ள வாக்காளர்களுக்கு ஒரு நபரை கைது செய்ய பரிந்துரைப்பது உள்ளிட்ட விரிவான அதிகாரங்கள் உண்டு. இப்படியொரு சட்ட முன்வரைவைக் கொண்டு வருவதன் மூலம், உள்ளூர் அளவில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதியை திரும்பப் பெறுகிற உரிமையை வழங்குகிற மூன்றாவது மாநிலமாக தில்லி மாறும். பிரதிநிதிகளின் செயலின்மை காரணமாக அவர்களை திரும்பப் பெறும் உரிமை வாக்காளர்களுக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு வட்டமும் (வார்டு) 8 முதல் 12 வரையிலான மொஹல்லாக்களாக (வட்டாரங்களாக) பிரிக்கப்படும். கிராம சபைக்கு பதிலாக மொஹல்லா சபை (வட்டார சபை) இருக்கும். அதில் தகுதி உள்ள வாக்காளர்கள் இருப்பார்கள்.

முதலமைச்சர் கெஜ்ரிவால் வலியுறுத்தி வந்த விஷயங்களில் மொஹல்லா சபையும் ஒன்றாகும். முற்றிலும் கிராமச் சூழல் சார்ந்த ஒரு ஏற்பாடு ஒரு நகரப் பகுதிக்கு கொண்டு வரப்படுவது இதுவே முதல் முறையாகும். மற்றொரு முதல் முயற்சியாக, முழுமையான மாநிலம் அல்லாத ஒரு மாநிலத்தில் இது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தில்லியைப் பொறுத்தவரையில் அரசின் செயல்பாடுகளில் 30 சதவீதம் மட்டுமே மாநில அரசின் நிர்வாகத்தில் உள்ளது, இதர அதிகாரங்கள் மத்திய அரசிடம்தான் உள்ளன. இந்த நிர்வாகச் சூழலை புதிய சட்டம் எவ்வாறு கையாளப் போகிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு சுவையான விஷயம்தான். உதாரணமாக, குறிப்பிட்ட நபரை கைது செய்யப் பரிந்துரைக்கும் அதிகாரம் மக்களுக்கு வரலாம்; ஆனால், தில்லி காவல்துறை மத்திய அரசின் உள்துறை அமைச்சக கட்டுப்பாட்டில் இருக்கிறது. சட்ட முன்வரைவின் முழு விவரங்களும் இனிமேல்தான் வெளிவர வேண்டும் என்றாலும், இந்த சுயாட்சி சட்ட முன்வரைவில் கூறப்பட்டுள்ள அதிகாரம் பரவலாக்கப்பட்ட அரசு நிர்வாகம் என்பதை பரிசோதித்துப் பார்ப்பதற்கான ஒரு சுவாரஸ்யமான மேடையை தில்லி உருவாக்கியுள்ளது.

உள்ளாட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் தில்லிக்கு ஒரு சுவையான வரலாறு உண்டு. அதிகாரம் பரவலாக்கப்பட்ட நிர்வாகத்திற்கான முயற்சியில் அந்த அனுபவங்களை நினைவு கூர்தல் பொருத்தமானதாகும். தில்லியில் சுமார் 200 கிராமங்கள் உள்ளன. அதன் மக்கள் தொகையில், கிராமத்தினர் என்று சொல்லத்தக்கவர்களாக இருப்பவர்கள் 4 சதவீதத்தினருக்கும் குறைவானவர்கள். தில்லியில் துடிப்புமிக்க பஞ்சாயத்து முறைகள் இருந்தன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு அமைப்புகளும், ஒரு ஆலோசனை அமைப்பும் இருந்தன. ஆனால், அனைத்திலும் வாக்காளர்களின் முனைப்பான பங்கேற்பு உண்டு. 1954ல் ஒரு பஞ்சாயத்துராஜ்சட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலங்களில் தில்லியும் ஒன்று. காவுன் சபா (இன்று கிராம சபை என்று கூறப்படுவது), காவுன் பஞ்சாயத்து (கிராம பஞ்சாயத்து) ஆகிய அமைப்புகள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. வட்டார பஞ்சாயத்து அமைப்பு, நீதித்துறை செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த பஞ்சாயத்துகளுக்கான முதல் தேர்தல் 1959 அக்டோபரில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட 1960 மார்ச் மாதத்தில் செயல்படத் தொடங்கின.

பஞ்சாயத்து நீதிமன்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் வட்டார பஞ்சாயத்துக்கு புதிய சட்ட முன்வரைவில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் முந்தைய பஞ்சாயத்து சட்டங்களிலேயே இருக்கின்றன. உதாரணமாக கிராமங்களுக்கு அன்று கிராம சபைகள் இருந்தன. அவை

இப்போது மொஹல்லா சபை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. காவுன் சபாக்களுக்கு, கிராமத் தலைவரையும் துணைத் தலைவரையும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலமாக தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்தது. பஞ்சாயத்து நீதிமன்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் வட்டார பஞ்சாயத்துகளுக்கு இருந்தது. அந்த நீதிமன்றங்கள் பெரும்பாலும் உரிமையியல் வழக்குகளைக் கையாண்டன. கிட்டதட்ட அதே போன்ற ஏற்பாடுதான் புதிய சட்டத்திலும் உள்ளது. ஆயினும், எந்த ஒரு பஞ்சாயத்தாவது சரியாக செயல்படவில்லை என்று துணை நிலை ஆளுநர் கருதுவாரானால் அதனை இடை நீக்கம் செய்கிற அல்லது முற்றிலுமாக நீக்குகிற அதிகாரம் அவருக்கு இருந்தது.

இன்று அந்த கிராம பஞ்சாயத்துகளின் நிலை என்ன? 1992ல், அரசமைப்பு சாசனத்தின் 73, 74வது திருத்தங்களின் கீழ் கிராம அளவிலும் நகர அளவிலும் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்துவது சட்டப்பூர்வமாக கட்டாயமாக்கப்பட்டது. தில்லி மாநகராட்சி, இயல்பாகவே ஒரு நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகமாக மாறியது. ஆனால், தில்லியின் கிராமப் பகுதிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தில்லியின் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. கடைசியாக 1983ல்தான் தேர்தல் நடந்தது. 2009ல் பஞ்சாயத்து ராஜ்சட்டத்திலிருந்து தில்லிக்கு விலக்கு அளிக்குமாறு கோரி மத்திய அரசை தில்லி அரசு அணுகியது. 1989ல் கிராம பஞ்சாயத்துகளின் பதவிக்காலம் முடிவுக்கு வந்த பிறகு, கிராமப் பஞ்சாயத்துகளை அரசாங்கம் சட்டப்பூர்வமாக ஏற்கவில்லை. ஆனால், அதே பகுதிகளிலிருந்து மாநகராட்சிக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், பழைய பஞ்சாயத்து ராஜ்சட்டத்தின் பல விதிகள் இப்போதும் நடைமுறையில் உள்ளன. இது எதிர்காலத்தில் சட்டப்பூர்வ நடைமுறைகளிலும் அரசமைப்பு சாசன ரீதியாகவும் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

தில்லியின் கிராமப் பஞ்சாயத்துகளை எல்லோரும் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. கடந்த பல ஆண்டுகளில் தில்லி மாநகராட்சி என்ற வடிவில் நகர உள்ளாட்சி அரசாங்க முறை வேரூன்றி விட்டது. இதனால், கிராமம், நகரம் ஆகிய இரண்டு பகுதிகளுக்குமே தில்லி மாநகராட்சி சேவை செய்வதால், அதற்கு ஒரு தனித்தன்மை உருவாகியுள்ளது. நகரப் பகுதிகளின் மேல் அக்கறைக் கொண்டதாக பெயரிலேயே அமைந்துள்ள புதிய சட்டம், கிராமப் பகுதிகளுக்கும் சுயாட்சி முறை குறித்து உறுதியளிக்கிறது என்பது வேடிக்கையானதுதான்.

***Source:*** Down to Earth, February 16-18, 2014

## கட்டுமான செலவை குறைக்க திட்டம் : 100 நாள் திட்ட பணியாளர்களுக்கு புது பணி

மத்திய அரசின், வீட்டு வசதித் திட்டம் மற்றும் தமிழக அரசின் பசுமை வீடுகள் திட்டத்துக்கு, 100 நாள் வேலை திட்டப் பணியாளர்களைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக திட்ட விதிகள் திருத்தப்பட்டுள்ளன. கட்டுமானத் தொழிலாளர்களின் கூலி, கடுமையாக உயர்ந்துள்ளதால், அதிகரிக்கும் கட்டுமானச் செலவைக் குறைக்க, இந்த உத்தி கையாளப்படுகிறது என, அதிகாரிகள் கூறுகின்றனர்.

**67 லட்சம் குடும்பங்கள் :** விவசாய நீர் நிலைகளை மேம்படுத்துதல், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் விவசாய நிலங்களை சீரமைத்தல், நிலத்தடி நீரை உயர்த்த, பண்ணை குட்டைகளை அமைத்தல் உள்ளிட்ட பல பணிகள், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது, இந்தத் திட்டப் பணியாளர்களை, மத்திய, மாநில அரசுகளின் வீட்டு வசதித் திட்டங்களுக்கு, 100 நாள் வேலை திட்டப் பணியாளர்களை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, திட்ட விதிகளில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மத்திய அரசின், இந்திரா வீட்டு வசதித் திட்டம், தமிழக அரசின் பசுமை வீடுகள் திட்டத்திற்கு பயன்படுத்த, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

**செலவு குறையும் :** இதுகுறித்து, தமிழக ஊரக வளர்ச்சித் துறை மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது: மத்திய, மாநில அரசுகளின் வீட்டு வசதி திட்டங்களும் ஏழைகளின் மேம்பாட்டுக்காக நிறைவேற்றப்படுபவை தான். எனவே தான், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தில், ஒரு வீடு கட்ட, பயனாளிகளுக்கு, 1.20 லட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. இதில், மத்திய அரசின் பங்கு, 52,500; மாநில அரசின் பங்கு ?

**ரூ.2.10 லட்சம்:** தமிழக அரசின் பசுமை வீடு திட்ட ஒதுக்கீடு, 2.10 லட்சம் ரூபாய். இந்த ஒதுக்கீட்டுத் தொகைக்குள், வீட்டைக் கட்ட, நிதி போதவில்லை. எனவே, "100 நாள் வேலை திட்டத்தில் பயிற்சி பெறாத பணியாளர்களை, கட்டுமானப் பணிக்கு பயன்படுத்தினால், செலவைக் குறைக்கலாம்' என, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருந்தோம். இப்பரிந்துரையை ஏற்று, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. 80 – 90 மனித வேலை நாட்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளது. இதற்கான முழு விவரங்கள் விரைவில் வெளியாகும். இவ்வாறு, அவர் கூறினார்.

**ஆதாரம்: தினமலர்**

For Private Circulation Only




Source: http://4.bp.blogspot.com/-TJqCgoFXRHM/UY04tjlz_vl/AAAAAAAATeY/enrN-kLgROI/s640/food_ss_22_12_2011.jpg



http://static.ibnlive.in.com

வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண். 54, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா

தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905,

மின்அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com

இணையதளம் : www.humanrightsfoundation.org.in